

830
ZWE
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF CEYLON
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபலையின் கடிதம்

மூலம் :

**ஸ்ரீபன் செவாக்**

தமிழில் :

**செ. கணேசலிங்கன்**

275566

LAYALUCKSHMI BOOK DEPOT
248, Galle Road,
WELLAWATTE
T/PHONE 88930.

விற்பனை உரிமை:

**பாரி நிலையம்**

*59, பிராட்வே, சென்னை—1.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல் பதிப்பு: செப்டம்பர் 1965.
(c)

ஆசிரியரின் பிற நூல்கள்:

நல்லவன் (சிறு கதைத் தொகுதி)
ஒரே இனம் ,,
சங்கமம் ,,
நீண்ட பயணம் (நாவல்)

விலை ரூ. 1-25

PAARI NILAYAM
59, Broadway, Madras-1.

அச்சிட்டோர்: பாரதம் பிரஸ், சென்னை-17.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF CEYLON
LIBRARY

# அறிமுகம்

ஸ்ரீபன் செவாக் (Stefan Zweig) ஒரு யூத எழுத்தாளர். வியன்ஞ நகரில் 1881-ல் பிறந்து பல்கலைக் கழகம் வரை கல்விகற்ற அறிஞர். ஜெர்மன், பிரெஞ்சு, ஆங்கில மொழிகளில் பாண்டித்தியம் பெற்றவர்.

முதலாவது உலகப் போரின் பின்னர் ஐரோப்பாவில் சிறந்த எழுத்தாளராகக் கருதப்பட்டவர். அவரது எழுத்துக்களில் வேகத்தையும் உணர்ச்சியோட்டத்தையும் காணலாம். மனிதாபிமானமும் மனித உணர்ச்சிகளுக்கு மதிப்பளிக்கும் சிறப்பும் கொண்ட எழுத்தாளர். சுவைபட, ஆர்வத்தோடு படிக்கத் தக்கதாக எக்கதையையும் சொல்லி விடுவார். அவரது சமூகக் கதைகளில் மட்டுமல்ல சரித்திரக் கதைகளிலும் இச்சிறப்பைக் காணலாம்.

உலகத்தில் நாற்பதிற்குமேற்பட்ட மொழிகளில் அவர் நாவல்கள் யாவும் வெளிவந்துள்ளன. இந்திய மொழிகளிலும் மலையாளம், இந்தி, வங்காளம் ஆகிய மொழிகளில் சில நாவல்கள் வெளிவந்துள்ளன.

தமிழில் 'அபலையின் கடிதம்' Letter from an unknown Woman) முதல் முயற்சி. இதோர் சிறிய குறுநாவல். அவரது கதை சொல்லும் புதிய பாணி, சம்பவங்களைக் கதையோடு பின்னும் திறன், உணர்ச்சியோட்டத்தின் வேகம், ஆர்வமூட்டும் கதையமைப்பு ஆகியவற்றை மாதிரியாகப் படித்தறிவதற்காகவே இதை மொழி பெயர்த்து தமிழர்கள்முன் தர முன் வந்துள்ளேன். அவரின் நாவலும் எமது மொழியிலுண்டு என்ற

பெருமையாவது. ஏற்படட்டும். இரக்கத்திற்கு விழிப்பாயிரு, ஸ்காத்லாந்து மேரி, கெலடஸ்கோப் ஆகியன உலகப் புகழ்பெற்றவை.

ஹிட்லரின் யூதர் எதிர்ப்பு வெறியால் மிகவும் பாதிக்கப்பட்டவர்களில் ஸ்ரீவன் செவாக்கும் ஒருவர். ஜெர்மனியில் போற்றிப் படிக்கப்பட்ட இவரின் நூல்கள், மிருக வெறியேற்பட்டதும் யூதர் என்ற ஒரு காரணத்திற்காகத் தீமூட்டித் தெருக் களிலே எரிக்கப்பட்டன. அவர் பரப்பிய மனிதாபி மானம் அங்கு சாம்பலாகியது.

இரண்டாவது உலகப் போர் ஆரம்பித்ததும் பிறந்து, தவழ்ந்து, வாழ்ந்த ஆஸ்திரியா நாட்டை விட்டு நாடு நாடாக ஓடினுர். பல நாடுகள் தஞ்சம் தரத் தயாராக இருந்தபோதும் இறுதியில் மனைவியா ருடன் பிரேஸில் நாட்டில் சரண்புகுந்தார்.

யுத்தச் செய்திகளையும் மனித இனத்தின் கோர வெறியாட்டத்தையும் கண்டு தாங்கமுடியாது துடி துடித்தார்.

"...அறிவின் உழைப்பு என்பது தூய்மையான மகிழ்ச்சி; உலகில் உயர்ந்தது மனித சுதந்திரம்.

நண்பர்களுக்கு வணக்கம் தெரிவிக்கின்றேன். நீண்ட இரவின் பின் உதயத்தை அவர்கள் காணட் டும். பொறுமையற்ற நான் முன்பே போய் விடுகிறேன்.

ஸ்ரீபன் செவாக்,
22—2—1942.

என்று கடிதம் எழுதி வைத்துவிட்டு மனைவி யுடன் விஷமருந்தி விட்டார்.

24—9—65 }
யாழ்ப்பாணம். } செ. கணேசலிங்கன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபலையின் கடிதம்

இரா—என்ற புகழ் பெற்ற நாவலாசிரியர் விடுமுறையைக் கழிக்க மலைநாட்டிற்குச் சென்றிருந்தார். விடுமுறை முடிந்து வியன்னு நகருக்கு அன்று அதிகாலையில் திரும்பியதும் புகையிரத நிலையத்தில் ஒரு புதினப் பத்திரிகையை வாங்கிக் கொண்டார். பத்திரிகையின் திகதியைப் பார்த்த போது, அன்றுதான் தனது பிறந்த நாள் என்பது நினைவிற்கு வந்தது. 'நாற்பத்தொன்று!' மனதில் பளிச்சிட்டது. அதனுல் மகிழ்ச்சியோ கவலையோ ஏற்படவில்லை. ஒரு ராக்ஸியை வரவழைத்து ஏறிக்கொண்டார். வழியிலே பத்திரிகையை வெள்ளோட்டமிட்டார். வீடு சேர்ந்ததும் அவர் இல்லாத சமயம் சிலர் வீட்டில் வந்து தேடியதாகவும், சில டெலிபோன் செய்திகள் உள்ளதாகவும் வேலைக்காரன் கூறினுன். ஒரு கட்டுக் கடிதங்களும் காத்திருந்தன. ஆவலோடு அவற்றைப் பார்த்து, ஒன்று இரண்டை உடைத்துப் படித்தார். அவற்றை எழுதியவர்கள் வேண்டியவர்களாய் இருந்தனர். அறியாத கையெழுத்தில் விலாசமிட்டிருந்த கனமான உறைக் கடிதம் ஒன்றைத் தனியே எடுத்து வைத்தார். சாய்வு நாற்காலி ஒன்றில் ஓய்வாக அமர்ந்து தேநீர் அருந்தியவாறே பத்திரிகையை வாசித்து

முடித்தார். பின்னர், சுருட்டைப் பற்றவைத்துக் கொண்டு அந்தக் கடிதத்தைப் பிரித்தார்.

அது சாதாரண கடிதமல்ல. பல டஷின் தாள்களில் ஒரு பெண்ணின் கையெழுத்தில் அவசரமாக எழுதப்பட்ட கட்டுரை! அதோடு இணைக்கப் பட்ட கடிதத்தை தவற விட்டு விட்டேனு என்ற எண்ணத்தில் கடித உறையை மீண்டும் கவனித்து பார்த்தார். அப்பவும் எதுவும் இல்லை; கையொப்பமில்லை; அனுப்பியவர் விலாசம் எதுவுமே இல்லை. மொட்டை.

'ஆச்சரியமாக இருக்கிறதே!' என்ற எண்ணம் எழ கடிதத்தை வாசிக்கத் தொடங்கினர்.

முன் குறிப்பாகப் பின் வரும் வார்த்தைகள் இருந்தன!

''என்னை என்றுமே தெரியாத உங்களுக்கு''

அவருக்குத் திகைப்பு. 'இக்கடிதம் எனக்கு எழுதப்பட்டதா? அல்லது யாராவது கற்பனை மனிதனுக்கா?'

அவரது ஆர்வம் திடீரென விழித்துக்கொண்டது. கடிதத்தைப் படித்தார்.

என் மகன் நேற்று இறந்துவிட்டான். மூன்று இரவும் பகலும் அவனது உயிருக்காக மரணத்துடன் எதிர்த்துப் போராடிக்கொண்டிருந்தேன். தணலாக எரிந்து கொண்டிருந்த என் செல்வத்தின் அருகே 40 மணிநேரமாகத் தொடர்ந்து இருந்தேன். இரவுபகலாக, பகலிரவாக அவனது நெற்றியில் ஐஸ்ஸை மாறிமாறி வைத்துக்கொண்டிருந்தேன். நடுங்கிக் கொண்டிருந்த அவனது ரகங்களைப்பிடித்துக்கொண்டிருந்தேன். மூன்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாள் மாலையில் என் பலம் போய்விட்டது. என்னை அறியாமலே என் கண்கள் மூடிக் கொண்டன. நாற்காலியில் இருந்தபடியே மூன்று நாலு மணி நேரமாவது நான் தூங்கியிருக்க வேண்டும். அவ் வேளையில் மரணம் என் செல்வத்தை அணைத்துக் கொண்டது.

அதோ, அந்த ஒடுக்கமான கட்டிலிலே சிறிது நேரத்திற்கு முன்னர் இறந்தவனாக என் கண் மணி கிடக்கிறான். அவனது அறிவொளி வீசிக் கொண்டிருந்த கருவிழிக் கண்கள் மட்டுமே மூடிக்கொண்டன. அவனது கைகள் மார்பிலே குறுக்காகக் கிடக்கின்றன. கட்டிலின் மூலைக் கொன்றாக நாலு மெழுகுவர்த்திகள் எரிகின்றன. அவற்றின் சுடர்கள் அசையும்போது அவனது முகத்திலேயும் மூடிய உதடுகளிலேயும் நிழல்கள் ஒன்றையொன்று துரத்திக் கொண்டிருந்தன. என்னால் பார்க்க முடியவில்லை; அசைய முடிய வில்லை. அவனது அங்கங்கள் அசைவதாகத் தோன்றுகின்றன. அவன் இறக்கவில்லை என்ற எண்ணம் இயல்பாகவே தோன்றுகின்றது. அவன் எழுந்துவிடுவான்; தன் தெளிவான குரலில் சிறுபிள்ளைத்தனமாக ஏதாவது சொல்லு வான்.

மனம் பிரமையில் விரிகிறது. ஆனால் அவன் இறந்து விட்டான் என்பதை நன்கு அறிவேன். அவனை இனிமேல் நான் பார்க்கமாட்டேன். பார்த்தால் மேலும் நம்பிக்கை ஏற்படும். மேலும் ஏமாற்றமடைவேன். எனக்குத் தெரியும். எனக்கு நன்கு தெரியும். என் குழந்தை நேற்று இறந்து விட்டான். இப்பொழுது இந்த உலகில் எனக்கு நீங்கள் மட்டுமே இருக்கிறீர்கள்; நீங்கள் மட்டுமேதான். ஆனால் உங்களுக்கு என்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளைத் தெரியாது. நீங்கள் கவலையற்று இன்ப வாழ்வு வாழ்ந்து கொண்டிருப்பீர்கள். என்னை என்றுமே தெரியாத - நான் வைத்த காதலை என்றுமே துறக்காத நீங்கள் மட்டுமேதான் எனக்கு இன்று இருக்கிறீர்கள்.

ஐந்தாவது மெழுகுவர்த்தி—சுடர் கொடுத்து மேசையிலே இருந்து உங்களுக்கு எழுதிக் கொண்டிருக்கிறேன். என் இதயத்தை யாருக் காவது திறந்து காட்டாது என்னால் தனியே இருக்க முடியாது. இத்துன்ப வேளையில் எனக்கு எல்லாமாக உள்ள உங்களுக்கல்லாது வேறு யாருக்கு என் இதயத்தைத் திறந்து காட்டுவது? என்னைப் பற்றி உங்களுக்கு • யாவற்றையும் விளக்கமாக கூறிவிட முடியாது. உங்களாலும் என்னைப் புரிந்துகொள்ள இயலாது. என் தலை கனக்கிறது. கன்னங்கள் பொடியாகின்றன. கை கால்கள் நடுங்குகின்றன. எனக்கும் நோய் வந்து விட்டது என எண்ணுகிறேன். இந்தப் பக்கத் திலே சளிச்சுரம் பரவிக் கொண்டிருக்கிறது. எனக்கும் தொற்றியிருக்கலாம். என் குழந்தை யுடன் சேர்ந்து கொள்வதையிட்டு நான் சிறிதும் கவலைப் படுவதற்கில்லை. சில வேளைகளில் என் கண்கள் இருட்டிக் கொள்கின்றன. இக்கடிதத் தையே எழுதிமுடிக்க முடியாது போய் விடலாம். ஆனால், என் காதலரே, நான் என் பலம் முழுவ தையும் செலுத்தி இந்த ஒரே முறையில் இக் கடித மூலம் என்னை என்றும் அறியாத உங்களு டன் பேச விரும்புகிறேன்.

உங்களுடன் மட்டுமே நான் பேச விரும்பு கிறேன். முதல் தடவையிலேயே அனைத்தை யும் உங்களிடம் சொல்லிவிடலாம், என் வாழ்க்கை முழுவதையும் நீங்கள் அறிய வேண்டும் என்றே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் விரும்புகிறேன். என் வாழ்க்கை என்றும் உங்களுடையதாகவே இருந்தது. ஆனால், என் வாழ்வைப் பற்றி உங்களுக்கு எதுவுமே தெரியாது. மேலும் என் வாழ்க்கையின் இரகசியம் பற்றி நான் இறந்த பின்னரே நீங்கள் அறிவீர்கள். அவ்வேளை நீங்கள் எவருக்குமே பதில் கூறவேண்டியதில்லை. என் நரம்புகள், உஷ்ணத்தையும் குளிரையும் ஊட்டிக்கொண்டிருக்கும் இயக்கம் இற்றுப்போனால் மட்டுமே நீங்கள் என்னைப்பற்றித் தெரிந்துகொள்ள முடியும். நான் மேலும் வாழ்வதானால், இக்கடிதத்தைக் கிழித்தெறிந்துவிட்டு, இதுவரை காலமும் இருந்தது போலவே மௌனமாக இருப்பேன். இதை உங்கள் கரங்களில் பிரிக்க நேர்ந்தால், ஒரு இறந்த பெண் தன் சுயசரிதையைச் சொல்லுகிறாள் என்று எண்ணிக்கொள்ளுங்கள். இது ஆரம்பம் முதல் கடைசியாக நினைவு வழுவாஸ்திர நிலை நிலவியவரை உங்களுடையதாகவே அமைந்த ஒரு வாழ்க்கையின் கதையே யாகும். என் வார்த்தைகளால் நீங்கள் எவ்வித அச்சமும் அடையவேண்டியதில்லை. உங்களது காதலோ, ஆறுதலோ நஷ்ட ஈடோ எதுவுமே எனக்கு வேண்டியதில்லை. இறந்த ஒரு பெண்ணுக்கு எதுவும் வேண்டியதில்லையே! உங்களை நான் வேண்டுவது ஒன்றே ஒன்றுதான். என் இதய வேதனை உங்களுக்குச் சொல்லத் தூண்டும் அனைத்தையும் முற்றாக நம்புங்கள். நான் உங்களிடம் வேறு எதுவுமே வேண்ட மாட்டேன், என் வார்த்தைகளை மட்டும் நம்புங்கள்; தன் ஒரே குழந்தையின் மரணப்படுக்கையின் அருகேயிருந்து ஒரு தாய் பொய் சொல்லுவாளா?

என் வாழ்க்கை முழுவதையும் உங்களிடம் சொல்லப் போகிறேன். உங்களை முதன் முதலில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணும்வரை எனக்கு வாழ்க்கை ஆரம்பமாக வில்லை. அதற்கு முந்திய காலத்தை நினைவு கூர்ந்து பார்க்கும்போது பயமும் இருளும் சிலந்திக்கூடு போன்று இழையோடிப் பூஞ்சணம் பிடித்த ஒரு சிறைக்கூட வாழ்க்கையே என் நினைவில் தெளிவின்றித் தோன்றுகிறது. கழிந்த வாழ்க்கை பற்றி என் மனம் சிறிதும் கவலைப் படவில்லை. என் வாழ்க்கையில் நீங்கள் நுழையும் போது எனக்குப் பதின்மூன்று வயது. நீங்கள் இப்போது வசிக்கும் அதே வீட்டிலே என் கடைசி மூச்சாகிய இக்கடிதத்தைப் படித்துக் கொண்டிருக்கும். அதே வீட்டிலேயே நான் வசித்து வந்தேன். அதே மாடியில்தான் நான் வாழ்ந்தேன். ஆனால் எங்கள் வாசற் கதவு உங்களுடைய கதவிற்கு எதிராக இருந்தது. நீங்கள் நிட்சயமாக எங்களை மறந்திருப்பீர்கள். கணவனின் மறைவினால் கவலைப்பட்டுக் கொண்டிருந்த அக்கவுண்டன் மனைவியையும், ஒல்லியாக வளர்ந்திருந்த ஒரு சிறு பெண்ணையும் நீங்கள் எப்பொழுதோ மறந்திருப்பீர்கள். நாங்கள் எப்பொழுதும் அமைதியாகவேவாழ்ந்தோம். எங்கள் பெயரை முன் கதவில் நாங்கள் பொறித்ததில்லை; எங்களிடம் எவரும் வருவதில்லை. ஆகவே நீங்கள் எங்கள் பெயரை ஒருபோதும் கேட்டிருக்க முடியாது. மேலும் எவ்வளவோ காலத்தின் முன்னர்-பதினைந்து, பதினாறு வருடங்களுக்கு முன்னர்-அங்கு வசித்தோம். நீங்கள் ஞாபகத்திற்குக் கொணர்வது என்பது முடியாத விவகாரம். ஆனால், எத்தனை ஆர்வத்தோடு ஒவ்வொரு சிறு நிகழ்ச்சியையும் என்னால் நினைவு கூர்ந்து பார்க்க முடிகிறது! இன்று நடந்ததுபோல நான் உங்களைப் பற்றி முதன் முதலாகக் கேள்விப்பட்ட நாளையும் நேரத்தையும், கண்ட நாளையும் நேரத்தையும் எண்ணிப் பார்க்க முடிகிறது. என்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகமே ஆரம்பித்தது அப்பொழுதுதானே. நான் எப்படி இந்நிகழ்ச்சிகளை மறந்துவிட முடியும்? சிறிது நேரம் பொறுமையாக இருங்கள். ஆதியிலிருந்து அந்தம்வரை முழுவதையும் உங்களுக்குச் சொல்லுகிறேன். சிறிது நேரம், என் கதையைக் கேட்பதற்காகச் சோர்வு அடைய வேண்டாம். என் வாழ்க்கை பூராவும், உங்களைக் காதலித்ததில் நான் சிறிதும் சோர்வடைந்ததில்லை.

நீங்கள் குடியிருக்க வருவதற்கு முன்னர் அந்த மாடியில் இருந்தவர்கள் எந்நேரமும் சண்டையிடும் விசித்திர மனிதராயிருந்தனர். அவர்களே மிகவும் வறியவர்களாயிருந்தபோதும் நாம் அவர்களிலும் வறியவர்களாக இருந்தபடியால் போலும் எம்மை வெறுத்து வந்தனர். அந்த வீட்டுக்காரன் மதுபோதையில் மனைவியை அடிப்பது வழக்கம். இரவிலே உருளும் நாற்காலிகளினதும், உடையும் பிளேட்டுகளினதும் சத்தம் கேட்டு நாங்கள் அடிக்கடி தூக்கம் கலைந்து எழுவோம். ஒருமுறை இரத்தம் பீறிடும் வரை அந்தக் குடிகாரன் அடித்துவிட்டான். அவன் அவளைத் திட்டியபடியே தொடர, அவள் தலைவிரி கோலமாகப் படிக்கட்டுகள் வழியே நிலம் வரையில் ஓடிவந்து விட்டாள். பின்னர் மாடியிலுள்ள அனைவரும் வந்து போலிசுக்கு அறிவிப்பதாகப் பயமுறுத்திய பின்னரே சண்டை ஓய்ந்தது. என் தாயார் அவர்களுடன் எவ்விதத் தொடர்பும் வைத்துக்கொள்வதில்லை. அந்த வீட்டுப் பிள்ளைகளுடன் நான் போய் விளையாடுவதையும் தடுத்து விட்டார். நான் விளையாட மறுப்பதை வைத்துக்கொண்டு அவர்கள் என்னை எல்லாவிதமாகவும் பழிவாங்கினர். தெருவிலே கண்டால் இல்லாதபட்டப்பெயர் சொல்லிக் கேலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்வார்கள். ஒருமுறை பெரிய பனிக்கட்டி ஒன்றை என்மேல் எறிந்து விட்டனர். அது பல மாகப்பட்டு என் நெற்றி பிளந்து விட்டது. அந்த மாடி வீட்டில் குடியிருந்த அனைவருமே அவர்களை வெறுத்தனர். திடீர்ச் சூழலில் அவர்கள் அவ்வீட்டைக் காலி செய்ய வேண்டியதை அறிந்த பொழுது எல்லோருமே மகிழ்வுற்றனர். அந்தக் குடிகாரன் ஏதோ களவு எடுத்ததற்காகக் கைது செய்யப்பட்டான் என நினைக்கிறேன்.

''வீடு வாடகைக்கு விடப்படும்'' என்ற அட்டையைச் சில நாட்களின் பின்னர் முன் கதவில் பார்த்தேன், பின்னர் அந்த அட்டை எடுக்கப் பட்டுவிட்டது. ஒரு திருமணமாகாத எழுத்தாளருக்கு வாடகைக்குக் கொடுத்துள்ளோம்; இனிமேல் அமைதியாயிருக்கும் என்று வீட்டின் கண் காணிப்பாளன் கூறினன். அன்றுதான் உங்கள் பெயரை முதன் முதலாக அறிந்தேன்.

சில நாட்களின் பின்னர் மாடி நன்கு துப் புரவாக்கப்பட்டது. வர்ணம் பூசுபவர்களும், அழகுபடுத்துவோரும் வந்தனர். அவர்கள் அதி கம் சத்தமிட்டனர். ஆயினும் அம்மா சந்தோச மடைந்தார். அந்த வீட்டில் இனிமேல் அமைதி ஏற்படப்போகிறது என்று சொன்னர். உங்கள் மாடிக்கு வீட்டுச் சாமான்கள் வரும்போது நான் உங்களைக் காணவில்லை. வீட்டை அழகுபடுத் துவோரையும் தளவாடங்களை ஒழுங்கு செய்வோரையும் உங்கள் வேலையாள் மேற்பார்வை பார்த்தான். நரைமயிருடன் குள்ளமாகவும் சிரத்தையான பார்வை கொண்டவனுமாக இருப்பானே, அந்த வேலையாள்தான். நல்ல குடும்பங்களில் வேலையாளாக இருந்திருக்கிறன் என்பது நன்கு தெரிந்தது. வியாபார விஷயம்போல யாவற்றை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும் கவனித்தான்; எங்கள் அனைவரது நன் மதிப்பையும் பெற்றுக்கொண்டான். அவனைப் போன்ற உயர்தர வேலையாள் நகரப் புறம்போக்கி லிருந்தஎங்கள் மாடிகளுக்கு விந்தையாக இருந் தான். அவன் சுதந்திரமாக, சாதாரணமானவர் கள் போல இருந்தான். அதேசமயம், பிற வேலை யாட்கள் போலப் பணிவாகவும் இருந்தான். அம்மாவை துரைச்சாணியாக மரியாதை கொடுத்து மதித்து நடந்தான். சிறியவளான எனக்குமே மரியாதை செலுத்தினான். உங்கள் பெயரைச் சொல்லவேண்டிய வேளைகளில் உங்கள் மேலுள்ள அவனது பற்றும் பாசமும் தெரிந் தது. அதனால் நான் அந்த நல்ல கிழ ஜோன் மேல் அன்பு வைத்தேன்; என்றும் உங்களுக்குச் சேவை செய்யும் பாக்கியம் அவனுக்கு மட்டும் இருந்ததனால் அவன் மேல் பொருமையும் கொண்டேன்.

நான் ஏன் இந்தச் சிறு விஷயங்களையெல்லாம் உங்களுக்குச் சொல்லுகிறேன்? ஏனெனில், நான் வெட்கமும் நாணமும் நிறைந்த சிறு பெண்ணாக இருக்கும்பொழுதே உங்கள் குண நலன்கள் என்மேல் எத்தனை ஆதிக்கம் செலுத்தின என் பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். நான் உங்களைப் பார்க்குமுன்னரே உங்கள் கழுத்தில் (பாச) மாலை சூட்டிவிட்டேன். செல்வமும் தீர மும் விநோதமும் நிரம்பிக் கலந்த ஒரு சூழ்நிலை யில் உங்களை வைத்துப் பார்த்தேன். ஒடுங்கி வாழ்பவர்கள் புதுமையானவற்றைக் காண ஆவலாயிருப்பர். அந்த ஒதுக்குப்புறத்திலுள்ள மாடி வீட்டில் அனைவரும் உங்கள் வருகையை ஆவலுடன் எதிர்பார்த்திருந்தனர். ஒருநாள் மாலையில் பாடசாலையால் திரும்பியபோது வாச லில் தளவாடங்களை ஏற்றிவந்த லாரியைக் கண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டதும் என் ஆவல் காய்ச்சல் தோன்றும் அள விற்கு வளர்ந்திருந்தது. பாரமான பொருட் களெல்லாம் மேலே வந்துவிட்டன. வேலையாட் கள் சிறு பொருட்களை எடுத்துக்கொண்டு நின் றனர். நான் கதவருகே நின்று பார்த்துப் பாராட்டிக்கொண்டிருந்தேன். உங்கள் பொருட் கள் ஒவ்வொன்றும் நான் முன்னர் கண்டவற் றிலும் பார்க்க வேறாக இருந்தன. இந்தியச் சிலைகள், இத்தாலியச் சிற்பங்கள், பெரிய கண் கவரும் வர்ணப் படங்கள் யாவற்றையும் பார்த் தேன். கடைசியாக நான் நினைத்திருந்ததிலும் பார்க்க ஏராளமான—அழகான நூல்கள் வந்தன. கதவோடு அவை குவிக்கப்பட்டிருந்தன. வேலை யாள் ஒவ்வொன்றாக எடுத்துக் கவனமாகத் துடைத்தான். மேலும் குவிந்துகொண்டிருந்த புத்தகங்களை நான் ஆசையோடு பார்த்துக் கொண்டு நின்றேன். உங்கள் வேலையாள் என் னைத் துரத்தவில்லை. புத்தகங்களின் மேலிருந்த மென்மையான கவர்களை எடுத்துத் தடவிப் பார்க்க ஆசை இருந்தபோதும், எடுப்பதற்குத் துணிவு ஏற்படவில்லை. தயக்கத்துடன் சில புத் தகங்களின் தலைப்புகளைப் பார்த்தேன். பிரெஞ் சிலும், ஆங்கிலத்திலும், எனக்கு ஒரு வார்த்தை தானும் புரியாத மொழிகளிலும் பல நூல்கள் இருந்தன. மணிக்கணக்கில் நின்று பார்க்கும் ஆவல் எனக்கு இருந்தது. ஆனால், அம்மா அழைத்ததும் நான் ஓடிவிட நேரிட்டது.

உங்களைப் பார்க்காதபோதும் அன்று மாலை முழுவதும் உங்களைப்பற்றியே கற்பனை செய்து கொண்டிருந்தேன். கிழிந்த மட்டைக் கவர் போட்ட ஒரு டஜன் புத்தகங்கள் மட்டுமே என்னி டம் இருந்தன. உலகத்திலுள்ள ஏனைய பொருட்

களிலும் பார்க்க அப்புத்தகங்களை நான் அதிகம் விரும்பினேன்; அவற்றைத் திரும்பத் திரும்பப் படித்தேன். இத்தனை புத்தகங்களை வைத்திருப்ப வர் இவற்றையெல்லாம் படித்தவர், பல மொழிகள் தெரிந்தவர், செல்வத்துடன் கல்வி கற்ற மேதாவி எப்படியிருப்பார் என்று நான் எண்ணிப் பார்த் தேன். நூல்களின் தொகை என் நினைவை வானத்திற்கு ஈர்த்துச் சென்றது. உங்கள் உரு வத்தை மனதில் கற்பித்துப் பார்த்தேன். கண் ணாடி போட்ட கிழவராக இருப்பீர்கள்; எங் களுடைய பூகோள ஆசிரியரைப்போல நீண்ட வெண்தாடி வைத்திருப்பீர்கள்; அவரினும் பார்க்க நல்ல பார்வையும், இரக்க சுபாவமும் கொண்டிருப்பீர்கள்; இவ்வாறு எண்ணினேன். நீங்கள் அழகாக இருப்பீர்கள்; வயதானவராக இருப்பீர்கள் என்று நான் ஏன் துணிவாக நம்பி யிருந்தேன் என்பது எனக்குத் தெரியவில்லை. முதல் தடவையாக அன்றிரவு நான் உங்களைக் கனவில் கண்டேன்.

மறுநாள் நீங்கள் வந்துவிட்டீர்கள். நான் பார்ப்பதற்குக் காத்துக்கொண்டிருந்தும் உங்கள் முகத்தைக் காண முடியவில்லை. காணமுடியாது நேர்ந்தது என் ஆவல் சுடரைத் தூண்டியது. கடைசியில் மூன்றும் நாள் உங்களைக் கண்டேன். என் கற்பனைக்கு முற்றும் மாருக நீங்கள் இருந் ததை உணர்ந்தபோது நான் திகைப்படைந் தேன். கண்ணாடியணிந்த, நல்ல சுபாவமுள்ள கிழவராயிருப்பீர்கள் என எதிர்பார்த்திருந்தேன். இப்பொழுது நீங்கள் இருப்பதுபோலவே அன் றும் இருந்தீர்கள். காலம் சிறிய மாற்றத்தையும் ஏற்படுத்தாத மனிதர்களுள் நீங்கள் ஒருவர். சாக்லெட் கலரில் அழகான சூட் அணிந்திருந் தீர்கள். இளம் பையன்போல கடவைக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டு படியாக மேல் மாடிக்கு ஓடி வந்தீர்கள். பையன்களின் சுபாவம் உங்களுடைய ஒவ்வொரு அசைவிலும் இருந்தது. தொப்பியை எடுத்துக் கையில் வைத்திருந்தீர்கள். உங்களுடைய ஒளியும் களையும் கொண்ட முகத்தையும், வாலிப கேசத்தையும் கண்டு ஆச்சரியமடைந்தேன். உங்கள் அழகான நடுத்தர உருவம் அதிர்ச்சி தந்தது. உங்களில் இரு உருவங்களை நான் கண்டேன். ஒன்று, விளையாட்டிலும் தீரச் செயல்களிலும் ஆர்வம் கொண்ட இளகிய இதயம் கொண்ட வாலிபனைப் பார்த்தேன். மற்றது: பொறுப்புணர்ச்சியும், கலையுள்ளமும், பண்பாடும் கொண்ட மனிதராகவும் பார்த்தேன். என்னையறியாமலே, பிறர் உங்களைப்பற்றி கொண்டிருந்த கருத்தே என் மனதிலும் எழுந்தது. நீங்கள் இருவகை வாழ்வு வாழ்ந்தீர்கள். ஒன்று அனைவருக்கும் தெரிந்த வாழ்க்கை; உலகத்திற்குத் தெரிந்த வாழ்வு. மற்றது உலகிற்குத் தெரியாதது, உங்களுக்கு மட்டுமே தெரிந்த வாழ்வாகும். உங்களால் கவரப்பட்ட பதின்மூன்று வயதுப் பெண்ணாகிய நான் உங்கள் வாழ்வின் இரகசியத்தை முதற் பார்வையிலேயே கண்டு கொண்டேன்.

சிறுமியாக இருந்த எனக்கு நீங்கள் எத்தனை அற்புதமான மனிதராக விளங்கினீர்கள் என்பதை உங்களால் புரிந்துகொள்ள முடியாது. நூல்கள் எழுதியவராகவும் பரந்த உலகிலே புகழ் பெற்றவராகவும் இருந்ததினால், மாடியிலுள்ள ஒவ்வொருவரும் உங்களைப்பற்றியே பேசிக்கொண்டிருந்தனர். திடீரென இருபத்தைந்து வயது நிரம்பிய குதூகலமான வாலிபனைத் தோன்றினீர்கள். எனது குறுகிய உலகத்திலே நீங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டுமேதான் ரஸிக்கத் தக்கவராக இருந்தீர்கள் என்பதை நான் கூறவேண்டியதில்லை. ஒரு பதி மூன்று வயதுப் பெண்ணுக்குத் தெரிந்த அள வில் நீங்கள் மட்டுமே என் உலகில் வட்டமிட்டுக் கொண்டிருந்தீர்கள். நான் உங்களை, உங்கள் பழக்க வழக்கங்களை, உங்களிடம் வந்தவர்களை யெல்லாம் கவனித்துக் கொண்டிருந்தேன். இவை உங்கள் மேலுள்ள ஆவலைக் குறைப்பதற்குப் பதிலாக கூட்டியது. உங்களிடம் வருபவர்கள் உங்கள் இருவகை வாழ்க்கையையும் பிரதிபலிப் பவர்களா யிருந்தனர். இளைஞர்கள், உங்கள் தோழர்கள், மாணவர்கள் ஆகியவர்களுடன் நீங்கள் சிரித்துப் பேசினீர்கள். பெரிய இடத்துப் பெண்கள் சிலர் காரில் வந்து சென்றனர். நாட் டிய விற்பன்னர் ஒருவர்கூட ஒரு முறை வந்திருந் தார். அவரை முன்னர் நான் தூரத்திலேயே பார்த்திருந்தேன். இளம்பெண்கள், கைத் தொழிற் பாடசாலைகளில் படிக்கும் பெண்கள் கூட வந்து கதவருகே வெட்கத்துடன் நிற்பதை பார்த்திருக்கிறேன். உங்களிடம் வருபவர்களில் பெரும்பாலானோர் பெண்களே. இவற்றைப் பற்றி எல்லாம் நான் அப்போது எதுவுமே நினைக்க வில்லை. ஒரு நாள் அதிகாலையில் நான் பள்ளிக் குச் செல்லும்போது முகத்திற்கு திரை போட்ட படி, பெண் ஒருத்தி உங்கள் மாடியிலிருந்து இறங்கி வந்ததைப் பார்த்தேன். அப்போது எனக்குப் பதிமூன்று வயதேதான்; என் பூரணத் துவமற்ற நிலையில், உங்கள் செயல்களையெல் லாம் ஆர்வமாகப் பார்க்கும் என் நிலை 'காதல்' என்று நான் சிறிதும் உணரவில்லை.

ஆனால், என் இதயம் முழுவதையும் நன்கு மனமார உணர்ந்து கொண்ட உங்களுக்கு அர்ப் பணித்த நாளையும் நேரத்தையும் என்னால் கூற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியும். நான் பள்ளித்தோழி ஒருத்தியுடன் உலாவிவிட்டு வந்து கதவருகே நின்று கதைத்துக் கொண்டிருந்தேன். அவ்வேளை கார் ஒன்று வந்து நின்றது. துடிதுடிப்புடன் நீங்கள் இறங்கிப்போக இருந்தீர்கள். அந்தக் காட்சி என்றும் என்மனதைவிட்டு அகலவில்லை. கதவைத் திறந்துவிட வேண்டும் என்று ஏதோ ஓர் உணர்ச்சி என்னை உந்தியது. உங்கள் வழியில் நான் வந்தேன். நாம் மோதிவிட இருந்தோம். வசீகரமாக - நயமாக - என்னைப் பார்த்தீர்கள். மென்மையாகக் குறுஞ்சிரிப்பு உதிர்த்தீர்கள். மெதுவாக-அல்ல-இரகசியமாக, 'மிகவும் நன்றி' என்று சொன்னீர்கள்.

அவ்வளவுதான். நீங்கள் என்னை மெதுமையாக அன்போடு பார்த்த இவ்வேளை தொடக்கம் நான் உங்களுடையவளாகி விட்டேன். நீங்கள் பழகிய ஒவ்வொரு பெண்களையும் இப்படித்தான் பார்த்தீர்கள் என்பதைப் பின்னர்தான் நான் அறிந்து கொண்டேன். பாசம் உமிழும் கவர்ச்சியான பார்வை-பெண்களை மயக்கி இன்பமனுபவிப்பதற்காகவே பிறந்த ஆணின் பார்வையாகும். ஓட்டல்களில் உணவு பரிமாறும் ஒவ்வொரு பெண்ணையும், கதவு திறக்கும் ஒவ்வொரு வேலைக்காரப் பெண்ணையும் சாதாரணமாக இவ்வாறே நீங்கள் பார்த்தீர்கள். இந்தப் பெண்களையெல்லாம் அடைய வேண்டும் என்ற ஆசையுடன் நீங்கள் பார்த்தீர்கள் என்று நான் சொல்லவில்லை. ஆனால் உங்களில் உள்ள இனக்கவர்ச்சி உங்கள் கண்கள் ஒரு பெண்மேல் விழுந்ததும் கண்களை இளக்கி உருகும் விதமாகச் செய்து விடுகிறது. பதின்மூன்றுவயதில் இதைப்பற்றி நான் எதுவும் நினைக்கவில்லை. ஆனால் நான்நெருப்பில் குளித்தவள் போல உணர்ந்தேன். உங்கள் இளகிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்வை எனக்கு மட்டுமே உரியதென நம்பி னேன். இந்த ஒரே முறையிலேயே உங்கள் பார்வை அரைப் பெண்ணுக வளர்ந்திருந்த என் னுள் இருந்த பெண்மையை தட்டி எழுப்பி விட் டது. எதிர்காலம் முழுவதும் நான் உங்களுடைய வளானேன்.

"யாரது?" என் தோழி கேட்டாள். முதலில் என்னுல் பதில் கூற முடியவில்லை. உங்கள் பெயரைக் கூற என்னுல் இயலவில்லை. திடீரென உங்கள் பெயர் எனக்கு பரிசுத்தமான பெயராகி விட்டது. அது என் இதயத்துள் இரகசியமாகி விட்டது.

"அது இந்த வீட்டில் குடியிருப்பவர்" நான் விகாரமாகப் பதில் கூறினேன்.

"அப்படியானுல் ஏன் இப்படி முளித்துப் பார்த்தாய்?"

என் பள்ளித் தோழி ஏதோ அறியத் துடிப் பவள் போல ஆர்வத்துடன் கேட்டாள். அவள் என்னைக் கேலி செய்து என் இரகசியத்தைக் கண்டு பிடிக்க முயல்கிருள் என உணர்ந்தேன். என் முகம் என்றுமில்லாதபடி சிவந்து விட்டது.

"நீ யொரு மடைச்சி"

மிகவும் கடூரமாகவே கூறினேன். கோபம் மிகுந்தது. அவளை அறையக் கூடக் கருதினேன். அவள் விழுந்து விழுந்து சிரித்தாள். தோல்வி யடைந்த என் கோபம் கண்ணீராக மாறியது. அவளைக் கதவருகே விட்டு விட்டு, நான் மேலே ஓடினேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றுதொட்டு நான் உங்களைக் காதலித்தேன். பல பெண்கள் உங்களைக் காதலிப்பதாகக் கூறியதை நீங்கள் கேட்டுப் பழகிப்போய் இருப்பீர்கள் என்பதை நான் அறிவேன். ஆனால் என்னைப்போல அடிமைத்தனமாக, நாயின் விசுவாசத்துடனும், தியாக உணர்வுடனும் உங்களை எவரும் காதலித்திருக்க முடியாது. அறியாத குழந்தையின் காதலுக்கு எதுவுமே இணையாக முடியாது. என் காதல் மிக மோசமானது; அடிமைத்தனமானது; அமைதியானது; காதலுணர்வு மிக்கது. என்னையறியாமலே எழுந்த அக்காதல் வளர்ந்த ஒரு பெண்ணின் காதலுடனேயே ஒப்பிட முடியாததாகும். தன்னுள் வாழும் சிறு பெண்களால் மட்டுமே இத்தனை பாசத்தை வளர்க்க முடியும். பிறர் பலருடனும் நெருங்கிப் பழகுவதன் மூலம் உணர்ச்சிகளைக் கொட்டி, சிலருடனாவது அன்னியோன்யமாகக் கதைப்பதன் மூலமும், உணர்ச்சியைக் குறைத்துக்கொள்வார்கள். அவர்கள் காதலைப்பற்றிப் படித்திருப்பார்கள்; கேள்விப்பட்டிருப்பார்கள். அது எவருக்கும் தோன்றக்கூடும் என்பதையும் அறிந்திருப்பார்கள். இப்படியானவர்கள், காதலை பொம்மைபோல வைத்து விளையாடியிருப்பார்கள். பையன் ஒருவன் முதற்தடவை சிகரெட்டை புகைப்பது போல அனுபவித்திருப்பார்கள். ஆனால், என்னளவில் மனம்விட்டுப் பேசுவதற்கு எனக்கு எவருமில்லை. எவரும் எனக்குக் காதல் பற்றிக் கற்பித்ததில்லை. எவரும் அச்சுறுத்தியதில்லை. எனக்கு அனுபவமில்லை. நான் சந்தேகப்படவும் இல்லை. விதிவிட்ட வழி சென்றேன். உங்களை மையமாக வைத்து என் கற்பனைகள் என்னுள்ளே சுடர்விட்டு எரிந்தன.

என் தந்தையார் முன்னரே இறந்துவிட்டார். என் அம்மாவிற்குத் தன் கஷ்டங்களைத் தவிர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு எதைப்பற்றியும் சிந்திக்கவும் நேரமில்லை. கிடைத்துவந்த சிறிய பென்ஷன் தொகையுடன் குடும்பம் நடத்துவதே அம்மாவுக்குப் பெரிய பிரச்சனையாக இருந்தது. என் உள்ளத்திலுள்ள உணர்ச்சிகள் எதையுமே அவர் அறியார். என் பள்ளித் தோழிகளுக்கு சிறிய அறிவே இருந்தது. பாதிப்பேர் கெட்டுப்போயிருந்தார்கள். என் வயதான மற்றப் பெண்களின் எண்ணங்கள் பல துறையில் இருந்தன. என்னுள் எழுந்த உணர்ச்சிகள் யாவும் உங்களையே நாடி நின்றன. நீங்கள் எனக்கு—என் உள்ள உணர்ச்சிகளை எந்த உதாரணங்கொண்டு விளக்கமுடியும்? நீங்கள் எனக்கு என் வாழ்வின் சகலதுமாக விளங்கினீர்கள். உங்களைத் தவிர இந்த உலகில் எனக்கு எதுவுமே இருப்பதாகத் தெரிந்ததில்லை. உங்களுடன் தொடர்பில்லாத எதுவுமே எனக்கு அர்த்தமுள்ளதாகத் தெரிந்ததில்லை. அதன்பின்னர், யாரும் கண்டுகொள்ளக்கூடிய வகையில் நான் பாடசாலையில் விசித்திரமாக மாறியிருந்தேன். திடீரென நான் வகுப்பில் முதல் பிள்ளையானேன். நீங்கள் புத்தகம் படிப்பதில் ஆர்வம் உள்ளவர் என்று தெரிந்திருந்ததினால், இரவில் நெடுநேரம்வரை கண் விழித்திருந்து புத்தகம் புத்தகமாகப் படித்தேன். உங்களுக்கு சங்கீதப் பைத்தியம் உண்டு என்பதை அறிந்து, நான் பிடிவாதமாக நின்று பியானோ படித்தேன். அம்மாவிற்கும் ஆச்சரியமாயிருந்தது. என் உடைகளைத் தைத்து உங்கள் கண்களுக்கு அழகாகத் தெரியும்படி அணிந்தேன். என் பாடசாலை உடுப்பு ஒன்றில் சதுரமான துண்டு வைத்துத் தைத்த தையல் ஒன்று இருந்தது. அது எனக்கு எப்போதும் வேதனை தந்து கொண்டிருந்தது. அது உங்கள் கண்களில் படக்கூடாதே என்று அஞ்சினேன். படிக்கட்டில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரும்போது அதைக் கைகளிடையே பிடித்து மறைத்துக்கொள்வேன். எத்தனை பைத்தியக் காரத்தனம். நீங்கள் அன்று பள்ளித் தோழியுடன் நின்றபோது பார்த்தபின்னர் ஒருபோதும் என்னைப் பார்த்ததாகவே தெரியவில்லை.

ஆயினும், உங்களைப் பார்ப்பதிலும் உங்களுக்காகக் காத்து நிற்பதிலுமே என் நேரம் கழிந்தது. எங்கள் முன் கதவில் ஒரு சிறு துவாரம் இருந்தது. இதன் மூலம் உங்கள் கதவைப் பார்த்துக்கொள்ளலாம். அன்பரே, என்னை நினைத்துச் சிரிக்க வேண்டாம். இன்றும் அந்தக் கள்ளத் துவாரத்தருகே மணிக்கணக்காக நின்று கழித்த காலத்தை நினைந்து நான் வெட்கப்படவில்லை. எங்கள் ஹாலில் பனிக்குளிர். அம்மா சந்தேகப்படுவதற்கு இடமளித்து விடுவேனோ என நான் அஞ்சிக் கொண்டிருப்பேன். அங்கு இருந்தபோது மாதங்களாக, வருடங்களாக கையிலே புத்தகத்துடன் மாலை முழுவதும் காத்திருப்பேன். நீங்கள் அருகே வந்தவுடன் வீணையின் கம்பிகள்போல என் இதயம் துடிதுடிக்கும். நான் துடிப்போடு உங்கள் அருகேதான் நிற்பேன். உங்கள் பாக்கெட்டிலுள்ள கடிகாரத்தின் பிரதான ஸ்பிரிங்கின் துடிப்பைப்பற்றி நீங்கள் அறியாததுபோல, என் துடிப்பையும் அறிந்திருக்க மாட்டீர்கள். நீங்கள் செல்லுமிடமெல்லாம் உங்களுடன் வந்து சரியான நேரத்தை விசுவாசமாக அது காட்டுகிறதல்லவா. லட்சக்கணக்கான செக்கண்டுகளுக்கிடையில் அவசரத்திலே ஒரு கணநேரமே நீங்கள் அதைப் பார்க்கிறீர்கள்.

உங்களிடமுள்ள 'சூட்டு'கள், 'டை'கள், உங்கள் பழக்கவழக்கங்கள் அனைத்தையும் நான் அறிவேன். உங்களிடம் வழமையாக வருபவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களையும் நான் அறிவேன். அவர்களில் சிலரை விரும்பினேன்! சிலரை வெறுத்தேன். பதின் மூன்று வயது தொடக்கம் பதினாறு வயதுவரை என் வாழ்வில் ஒவ்வொரு மணி நேரமும் உங் களுடையதாகவே இருந்தது. நான் செய்த விசித் திரமான செயல்கள்? நீங்கள் தொட்ட கதவின் பிடியை நான் முத்தமிட்டேன். நீங்கள் புகைத்து விட்டு வீசிய சிகரெட்டின் அடிக்கட்டையை எடுத்து வைத்திருந்தேன். உங்கள் உதடுகளுக் கிடையில்இருக்க அது பாக்கியம் செய்ததல்லவா. மாலைநேரத்தில் எந்த அறையில் வெளிச்சம் எரி கிறது, நீங்கள் எந்த அறையில் இருப்பீர்கள் என் பதை அறிந்து வைத்திருப்பதற்காக நூறுதடவை தெருவிற்கு இறங்கி ஓடியிருப்பேன். உங்களைக் காண முடியா விட்டாலும் நீங்கள் எவ்விடத்தில் இருப்பீர்கள் என்பதை அறிந்திருப்பதில் ஒரு நிறைவு. நீங்கள் வெளியூரில் தங்கும் வாரங்களில் எனக்கு வாழ்க்கை அர்த்தமற்ற தாகத் தோன்றும். ஜோன் உங்கள் பெட்டியை கீழே எடுத்துச் செல்லும்போதெல்லாம் என் இதயம் நின்றுவிட்டதுபோல உணர்வேன். அக் காலங்களில் பொழுதே போகாது. என்ன செய் கிறேன் என்பதையே என்னால் உணர முடியாது. அம்மாவிற்கு முன்னிலையிலேயே என்னை அறி யாது என் கண்கள் நிறைந்து, என்னை ஏமாற்றி விடுமோ எனவும் நான் அஞ்சுவதுண்டு.

ஒரு பெண்ணின் விழல் செயல்களை உங் களுக்கு விரித்து எழுதிக்கொண்டிருக்கிறேன் என் பதையும் அறிவேன். நான் அவற்றை நினைந்து வெட்கமடைய வேண்டும். ஆனால், நான் வெட்க மடையவில்லை. அக்காலத்தைப்போல என்காதல் தூய்மையாகவும், வேகம் கொண்டதாகவும் என்றும் இருந்ததில்லை. நீங்கள் என்னைப் பார்த்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞாபகம் இல்லாதபோதும், நான் உங்களுடன் எப்படி வாழ்ந்தேன் என்பதை மணிக்கணக்காக நாட்கணக்காக உங்களுக்குச் சொல்ல முடியும். உண்மையாகவே உங்களுக்கு என்னைத் தெரிந்திருக்க முடியாது. படிக்கட்டுகளில் உங்களைக் கண்டு மறைவாக ஒதுங்கி நிற்க முடியாத வேளைகளில்—சுவாலை வீசும் உங்கள் பார்வையிலிருந்து தப்புவதற்காக, தலையைக் குனிந்துகொண்டே துரிதமாக நடப்பேன். என் அவசர நடத்தை நீரில் மூழ்காது தப்புவதற்கு தண்ணீரில் பாய்வது போன்றதாகும். நீங்கள் இதுவரையில் மறந்திருக்கும் அந்தவருடங்களைப் பற்றிய செய்திகளை மணிக்கணக்காக-நாட்கணக்காக-என்னால் கூற முடியும். உங்கள் வாழ்வின் நாளாந்தரச் செய்திகளையே என்னால் நினைவூட்ட முடியும். ஆனால் இப்போது விரிவாகக் கூறி உங்களைச் சோர்வடையச் செய்ய நான் விரும்பவில்லை. என் குழந்தைப் பருவம் மிகச் சிறந்த அனுபவமாக எனக்கு இருந்தது! என்பதை மட்டுமே உங்களுக்குக் கூற விரும்புகிறேன். நீங்கள் இவற்றைக் கேட்டுச் சிரிக்க வேண்டாம். உங்களுக்கு இவை சிறியவையாக இருக்கலாம். எனக்கோ, இவை மிகவும் முக்கியமானவையாகும்.

அது ஒருஞாயிற்றுக்கிழமையாக இருக்கலாம். நீங்கள் வெளியே போய்விட்டீர்கள். உங்கள் வேலையாள் கதவருகே வைத்துத் தட்டித் துடைத்துவிட்டு பாரமான மேசைகளை இழுத்துக்கொண்டிருந்தான். அவனது பலத்திற்கு அவை மிகவும் பாரமாக இருந்தன. மனத்தைரியத்தை வரவழைத்துக் கொண்டு, ''நான் உதவலாமா?'' என்று கேட்டேன். அவன் ஆச்சரியமடைந்தான். ஆயினும், என் வேண்டுகோளை மறுக்கவில்லை. நான் எத்தனை பயபக்தியான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்வுடன் உங்கள் அறைக்குள் நுழைந்தேன் என்பதை உங்களுக்கு எவ்வகையிலும் விளக்க முடியாது. உங்கள் உலகத்தை அங்கு கண்டேன். நீங்கள் உட்கார்ந்து எழுதும் மேசையைப் பார்த்தேன். (நீல நிற மலர்க் குவளை ஒன்றில் சில மலர்கள் இருந்தன) அங்குள்ள படங்களையும் புத்தகங்களையும் திருட்டுத்தனமாகப் பார்த்தேன். ஜோனைக் கேட்டிருந்தாலே சுற்றிப்பார்ப்பதற்கு விட்டிருப்பான். ஆயினும், எனக்கு அந்தச் சூழ் நிலையைச் சிலநேரம் பார்த்ததே திருப்தியாக இருந்தது. விழித்திருக்கும்போதும் தூங்கும் போதும் காணும் முடிவற்ற கனவுகளுக்கு அவ் வளவுமே போதிய ஆதாரமாக இருந்தன.

இந்தச் சிறிய நேரமே என் குழந்தைப் பருவத்தின் மகிழ்ச்சியான நேரமாகும். என் வாழ்க்கை, உங்களுடன் பிணைந்துகொண்டது என்பதை நீங்கள் என்றாவது அறிய வேண்டும் என்பதற்காகவே, பின்னர் நடந்த ஒரு சம்ப வத்தை உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். அந்த மகிழ்ச்சியான வேளையையும் அதைத் தொடர்ந்து வந்த பயங்கர நேரத்தையும் உங் களுக்குக் கூற விரும்புகிறேன். நான் விளக்கமாகக் கூறியதுபோல என் நினைவு உங்களை மட்டுமே சுற்றிவட்டமிட்டுக்கொண்டிருந்தது. அம்மாவின் செயல்களையோ, எங்கள்வீட்டிற்கு வருபவர்களின் செய்கைகள் பற்றியோ, நான் சிறிதும் கவனிப்ப தில்லை. அம்மாவின் தூர பந்துவான, இன்ஸ் பர்க்கில் உள்ள வயதான வியாபாரி ஒருவர் வீட் டிற்கு அடிக்கடி வந்து, நெடுநேரம் தங்கிச் செல் வது பற்றி நான் கவனிக்கவேயில்லை. அவர் அம்மாவைச் சில வேளைகளில் தியேட்டர்களுக்கு அழைத்துச் செல்வது எனக்கு மகிழ்ச்சியளித்தது. நான் தனிமையில் உங்களை நினைக்க முடிந்தது.

275566

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களைப் பார்த்து இன்பம் அடைய முடிந்தது. என் ஒரே ஒரு இன்பமும் இதுதானே. ஆனால் ஒரு நாள் அம்மா என்னுடன் ஏதோ மிக முக்கியமான விஷயம் பேசவேண்டும் என அழைத்தார். நான் பயமடைந்தேன். என் இதயம் அதிர்ந்தது. ஏதாவது சந்தேகப் பட்டாளோ? நான் ஏதாவது வகையில் துரோகம் செய்தேனா? என்வாழ்வுடன் இணைக்கப்பட்டிருந்த என் அந்தரங்கத்தைப் பற்றியே முதலில் எண்ணினேன். ஆனால், அம்மாவே பேச முதலில் கஷ்டப்பட்டார். என்னை அவ்வாறு அம்மா என்றும் முத்தமிட்டதில்லை. சோபாவில் இருந்தபடியே என்னை அணைத்து ஒரு முறைக்கு மேலாக முத்தமிட்டு, முகத்திலே வெட்கம் மிளிர சிரமப்பட்டுக் கூறினாள். மனைவியை இழந்த தன் உறவினர் ஒருவர் தன்னைத் திருமணம் செய்து கொள்ளும்படி அவளை வேண்டியதாகவும், தான் என் நலத்தையும் எண்ணி ஒப்புக் கொண்டதாகவும் தெரிவித்தார். உங்களை நினைத்துக்கொண்டே ஆர்வத்துடன் நான் ஒரே ஒரு கேள்விமட்டுமே அம்மாவிடம் கேட்டேன்.

"நாங்கள் இங்கே தானே இருப்போம். இல்லையா?"

பதட்டத்துடன் வினவினேன்.

"இல்லை, நாங்கள் இன்ஸ்பர்க்கிற்குப் போக வேண்டும். அங்கு பேர்டினண்டுக்கு அழகான வீடு ஒன்று இருக்கிறது."

இதன்மேல் நான் எதுவும் கேட்கவில்லை. என் கண்முன்னே யாவும் சுழன்றது, நான் மயங்கி வீழ்ந்ததாகப் பின்னர் அறிந்தேன்.

கைகளை இறுகப் பிடித்தபடியே, தூண் அடிபெயரும் வாக்கில் நான் விழுந்தேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்த சில நாட்களில் என்ன நடந்தது என்பதை நான் கூற முடியாது. சக்தி எதுவும் இல்லாத குழந்தை போல நான் மூத்தவர்களின் முடிவுக்கு எதிராகப் பயனின்றிப் புரட்சி செய்தேன். அச்சம்பவத்தை நான் இப்பொழுது எண்ணும்போதும் எழுத முடியாத விதமாக என் கரம் நடுங்குகிறது. உண்மையான என் அந்தரங்கத்தைக் கூற முடியாத நிலையில் என் மறுப்பு வேண்டா வெறுப்பாகவே அவர்கட்குத் தோன்றியது. எனக்குத் தெரியாத வகையில் எல்லா ஒழுங்குகளும் செய்யப்பட்டன. நான் பள்ளிக்கூடத்தில் இருக்கும் நேரத்தைப் பயன் படுத்தினர். ஒவ்வொரு நாளும் நான் பாடசாலே யிலிருந்து வீடு வந்ததும், ஏதாவது சில பொருட் கள் வெளியே போயிருக்கும். என்வாழ்வு துண்டு துண்டாகச் சிதைந்து போவதுபோல இருந்தது. இறுதியாக ஒருநாள் இரவு சாப்பாடு நேரத்தில் நான் வீடு திரும்பியபோது எங்கள் மாடி வெறு மனே கிடந்தது. வெற்று அறைகளில் சில டிரங் பெட்டிகள் இருந்தன. நானும் அம்மாவும் படுப் பதற்கு இரண்டு 'காம்ப்' கட்டில்களும் இருந் தன. அந்த இரவு மட்டுமே நாங்கள் அங்கு தங்க வேண்டும். பின்னர் இன்ஸ்பர்க்கிற்குப் போக வேண்டியதுதான்.

உங்களுக்கு அருகே வாழ்வதல்லாது நான் வாழ்வதில்லே என்று அக்கடைசி நாளன்று நான் தீர்மானித்தேன். எனக்கு உலகனைத்தும் நீங்களா கவே இருந்தீர்கள். இவ்வேளேயில் நான் என்ன எண்ணிக் கொண்டிருந்தேன். ஆற்ரு நிலேயில் என் சிந்தனேயே தடைப்பட்டு விட்டதா என் பதை என்னுல் கூற முடியாது. அம்மா வீட்டை விட்டு வெளியே போய் விட்டார். பள்ளி உடுப் புடனே நான் எழுந்து உங்கள் கதவருகே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தேன். நான் வந்தேனு என்பதை என்னுல் கூறமுடியாது. காந்தம் கவர்ந்தது போல, உடல் நரம்புகள் நடுங்க உங்கள் கதவருகே ஈர்க்கப் பட்டேன். உங்கள் காலில் விழுந்து, உங்கள் வேலைக்காரியாகவோ அடிமையாகவோ உங்கள் வீட்டில் என்னை வைத்திருக்க வேண்டும் என்று மன்ருடிக் கேட்கவேண்டும் என்பதே என் நினை வில் வட்டமிட்டுக் கொண்டிருந்தது. ஒரு பதி னைந்து வயதுப் பெண்ணின் செயலைப் பார்த்து நீங்கள் சிரிக்கலாம் என்ற எண்ணமும் எனக்குப் பயமூட்டியது. அந்தக் குளிரிலே தடுக்க முடியாத சக்தி ஒன்று உந்த நான் அசைவற்று எப்படி நின்றேன் என்பதை நீங்கள் எண்ணிப் பார்த் தால் ஒருபோதும் சிரிக்க மாட்டீர்கள். என் விருப்பம் இல்லாமலே என்கை மேலே எழுந்தது. சில கணங்களாக மனப் போராட்டம் நடை பெற்றது. ஒரு கணம்! பயங்கரமான நேரம்! மணியை அடித்தேன். அந்த மெல்லிய ஒலி இன் னும் என் செவிகளில் ஒலித்துக் கொண்டிருக் கிறது. அதன் பின்னர் அமைதி. என் இருதயம் அடிப்பது நின்று விட்டது. நான் உங்கள் வரவை, கூர்ந்து கேட்டுக் கொண்டிருந்தேன்.

ஆனுல் நீங்கள் வரவில்லை. எவருமே வர வில்லை. நீங்கள் அந்தமாலையில் எங்கோ வெளியே போயிருக்க வேண்டும். ஜோனும் வெளியே சென் றிருப்பான். இறந்த அந்த மணி ஒலி என் செவி களில் ஒலித்துக் கொண்டிருக்க நான் வெற்றெின இருந்த எங்கள் வீட்டிற்குள் நுழைந்தேன். கொட்டும்பனிக்குள்ளே பலமணிநேரம் அலைந்தது போன்ற களைப்பு அந்தச் சிறு நேரத்தில் ஏற்பட் டது. களைப்பினுல் ஒரு மரத்தட்டின் மேல் சரிந் தேன். என் சோர்விற் கிடையிலும் என்னை அவர் கள் இழுத்துச் செல்லு முன்னர் உங்களைக் காண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும் என்ற நினைவு சுடர்விட்டது. என் மனதில் எவ்வித பால் உணர்ச்சி ஆசையும் இருக்கவில்லை என்பதை உறுதியாகக் கூறுவேன். நான் அப்போதும் அறியாமையிலேயே இருந்தேன். நான் உங்களைத் தவிர எதைப் பற்றியுமே எண்ணவில்லை. உங்களை இன்னெரு தடவை பார்த்துவிட வேண்டும் என்பதே என் நினைவாக இருந்தது. அந்தப் பயங்கர இரவு முழுவதும் உங்களுக்காகக் காத்து நின்றேன். அம்மா வந்ததும்படுத்துவிட்டார். நான் ஹாலுக்குள் தவழ்ந்து வந்து அந்தப் பயங்கர இரவு முழுவதும் உங்கள் வருகையைக் கூர்ந்து கவனித்தேன். அது ஒரு ஜனவரி மாதத்துக் கடுங் குளிர் இரவு. நான் மீண்டும் களைத்து விட்டேன். என் நரம்புகள் வலித்தன. இருப்பதற்குக் கூட ஒரு நாற்காலி யில்லை. நான் நிலத்திலேயே படுத்திருந்தேன். அணிந்திருந்த மெல்லிய உடையுடன் போர்வை ஏதுமின்றிக் கிடந்தேன். போர்வையினுல் உடலுக்குச் சூடேற்ற நான் விரும்பவில்லை. அவ்வேளை நான் தூங்கிப்போய் உங்கள் காலடிச் சத்த ஒலியைத் தவற விட்டுவிடலாம் என அஞ்சினேன். அந்தப் பயங்கர இருட்டில் நான் குளிரினுல் விறைத்துக் கொண்டிருந்தேன். இடையிடை எழுந்து நின்று பின்னர் படுத்துக்கொண்டேன். நான் காத்திருந்தேன்; உங்களுக்காகக் காத்திருந்தேன்; என் தலை விதியின்படி காத்திருந்தேன்.

நீண்ட நேரத்திற்குப் பின்னர் (அதிகாலை இரண்டு மூன்று மணியாக இருக்கலாம்) வீட்டின் கதவு திறந்த ஓசை கேட்டது. படிக்கட்டுகளில் காலடிச் சத்தம் ஒலித்தது. குளிர் உணர்ச்சி மறைந்து சூடேறிய உணர்ச்சி என் உடலை ஊடுருவியது. நான் மெதுவாக கதவைத் திறந்தேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியே ஓடி வந்து...உங்கள் காலடியில் விழ வேண்டும்! அந்த உணர்ச்சி வெறியான நிலையில் என்ன செய்திருக்க வேண்டும் என்பதையே என்னல் கூறமுடியாது. காலடிச் சத்தம் நெருங்கி வந்தது. மெழுகுவர்த்தி ஒன்று சுடர் விட்டது. நடுங்கிய கரங்களுடன் கதவின் பிடியைப் பிடித்துக் கொண்டேன். நீங்கள் மட்டுமா படிக்கட்டில் ஏறி வந்தது?

ஆமாம் அன்பரே, நீங்கள் தான். ஆனல் நீங்கள் தனித்தல்ல. மெல்லிய சிரிப்பொலி; பட்டின் சலசலப்பு; அடித் தொண்டையில் பேசும் உங்கள் குரல் யாவும் கேட்டன. உங்களுடன் ஒரு பெண்!

அன்று இரவு முழுவதும் எப்படி நான் வாழ்ந்திருந்தேன் என்பதை என்னல் கூறவே முடியாது. மறுநாள் காலை எட்டு மணிக்கு என்னை இன்ஸ்பர்க்கிற்கு அழைத்துச் சென்றனர். எதிர்த்துப் போராடுவதற்கு என்னிடம் பலமில்லை.

என் குழந்தை சென்ற இரவு இறந்து விட்டான். நான் வாழ்வதானல் மீண்டும் தனிமையில்தான் வாழவேண்டும். நாளைக்கு நான் அறியாத அந்நியர் கறுத்த உடையுடன் என் பிள்ளையை எடுத்துச்செல்ல சவப்பெட்டியுடன் வருவர். நண்பர்கள் மலர் வளையங்களுடன் வரலாம். ஆனல், பிணத்தின்மேல் மலர்கள் பரப்புவதனல் பயனென்ன? வார்த்தைகளினல் பலவிதமாக ஆறுதல் கூறுவர். வார்த்தைகள்; வார்த்தைகள்; வார்த்தைகள்! வார்த்தைகள் எப்படி உதவமுடியும்? மீண்டும் நான் தனித்து விடுவேன் என்பதை நான் அறிவேன். மனிதர்கள் மத்தியில் தனித்து வாழ்வதைப் போன்று பயங்கரமானது வேறொன்றுமில்லை. இடை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிலே இன்ஸ்பர்க்கில் பதினறு தொடக்கம் பதி னெட்டுவயதுவரை இரு ஆண்டுகளும் வாழ்ந்த காலத்தில் நான் உணர்ந்து அறிந்தது இதுவே யாம். அங்கு கைதிபோலவும், கீழ் சாதியைச் சேர்ந்தவள் போலவும் வாழ்ந்தேன். அமைதி யான சுபாவமுள்ள என் சிறிய தந்தையார் என்னில் அன்பு காட்டினர். என் தாயார் தான் செய்த அநீதிக்குப் பிரதிபலஞக என் விருப்பங் களையெல்லாம் பூர்த்தி செய்யத் தயாராயிருந் தார். என் வயதோடு ஒத்த பலர் என் தோழிய ராக விரும்பினர். அவர்களையெல்லாம் நான் வெறுத்தேன். நான் சந்தோஷமாக இருக்கவும் விரும்பவில்லை. உங்களை விட்டுத் துன்புற்று வாழவும் விரும்பவில்லை. என்னுள்ளே தனிமை யில் நான் அமைத்த ஒரு மங்கிய உலகில் வாழ்ந்துகொண்டிருந்தேன். அவர்கள் வாங்கித் தந்த புதிய அழகான உடைகள் எதையும் நான் அணிவதில்லை. தியேட்டருக்குப் போக மறுத் தேன். குதூகலமாக ஊர் சுற்றிப் பார்ப்பதையும் வெறுத்தேன். அரிதாகவே வீட்டை விட்டுச் செல்வேன். இரு ஆண்டுகளாக வாழ்ந்த இந்தச் சிறிய நகரத்தில் எனக்கு பத்துப் பன்னிரண்டு தெருக்கள் கூடத் தெரியாது என்று சொன்னல் நீங்கள் நம்பமாட்டீர்கள். அழுவதுதான் என் இன்பம். சமூகத்தையும் எல்லா இன்பங்களையும் துறந்தேன். உங்களைக் காணுது இருப்பதற்கு ஈடாக வஞ்சம் தீர்ப்பதற்காகச் செய்யும் செயல் களே எனக்கு இன்ப வெறியாயிருந்தன. மேலும் உங்களுக்காக மட்டுமே வாழவேண்டும் என்ற என் நீண்ட ஆசையை எதுவுமே செய்யாது தடுத்துக்கொண்டேன். வீட்டிலே தனிமையில் எந்நாளும் எந்நேரமும் வேறு எவ்வேலையுமின்றி உங்களைப்பற்றிய மிருதிகளில் புதைந்தேன். என் மனத்திரையிலே தொடர்ந்து உங்களைப்பற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் நினைவிலுள்ள நூற்றுக்கணக்கான சம்பவங்களையும் திரும்பத் திரும்ப ஓட்டிப் பார்த்துக் கொண்டிருந்தேன். இதனால், நீங்கள் என் வாழ்வில் நுழைந்தபின்னர், நிமிடந்தோறும் நடந்தவை அனைத்தையும், நேற்று நடந்த சம்பவம்போல சோரம் போகா ஞாபகத்துடன் கூற முடியும்.

இவ்வாறு என் வாழ்வு இன்னும் உங்களையே வட்டமிட்டுக்கொண்டிருக்கிறது. நான் உங்கள் நூல்கள் அனைத்தையும் வாங்கினேன். புதினப் பத்திரிகைகளில் உங்கள் பெயரைக் கண்டுவிட்டால் அந்நாள் ஒரு பொன் நாளாகும். உங்கள் நூல்களைப் பல தடவைகள் படித்ததனால் அவை எனக்கு மனப்பாடமாகிவிட்டன என்று சொன்னால் நீங்கள் நம்பமாட்டீர்களா? யாராவது என்னைத் தூக்கத்திலிருந்து எழுந்திருக்கச் செய்து எங்கிருந்தாவது உங்கள் புத்தகத்திலுள்ள ஒரு வரியைச் சொல்லிவிட்டால் போதும், அதைத் தொடர்ந்து புத்தகம் முழுவதையுமே— பதின்மூன்று வருடங்களின் பின்னர் இன்றுகூட என்னால் கூற முடியும். நீங்கள் எழுதிய ஒவ்வொரு வரியும் பரிசுத்த வாக்கியமாக எனக்கு இருந்தது. உங்களுடன் உள்ள உறவு முறைக்காகவே எனக்கு இந்த உலகம் இருந்தது. வியன்னாவிலிருந்து வரும் புதினப் பத்திரிகைகள் உங்கள் தலைமையில் நடைபெற்ற களியாட்டு விழாக்கள், நாடகங்கள் பற்றி அறிவேன். மாலை வந்ததும் உங்களுடன் சேர்ந்து நானும் போய்க்கொண்டே "இப்பொழுது ஹாலை அடைந்திருப்பார்; இப்பொழுது உட்கார்வார்" என்றெல்லாம் மனதில் சொல்லிக்கொள்வேன். இவைதான் என் ஆசைகள். ஆயிரம் தடவைகள் இவற்றைச் சொல்வேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் ஏன் இவற்றைத் திரும்பக் கூற வேண்டும்? ஒரு இளம் பெண்ணின் பரிதாபகரமான ஏமாற்றங்களை ஏன் இப்பொழுது எடுத்துக் கூற வேண்டும்? என் நல்லெண்ணத்தைப் பற்றியோ துன்பங்களைப் பற்றியோ கனவிலும் எண்ணுத உங்களுக்கு நான் ஏன் இவற்றைச் சொல்லவேண்டும். நான் இன்னும் குழந்தையா? எனக்குப் பதினேழு வயது; பதினெட்டு. வாலிபர்கள் தெருவிலே என்னைத் திரும்பிப் பார்க்கிறார்கள். அவர்கள் எனக்கு சினத்தை ஊட்டினர். உங்களைக் காதலிப்பதே யல்லாது, வேருெருவர்மீது காதல் கொள்வதாக எண்ணிப் பார்த்தலே முடியாத செயலாக இருந்தது. மற்றொருவரில் சாதாரண அன்பு வைப்பதென்பதே பெரிய குற்றம் போல எனக்குத் தெரிந்தது. என் காதல் உங்கள்மேல் வலுப்பெற்று வந்தது. என் உடல் வளர்ந்தது; உணர்ச்சிகள் விழிப்படைந்தன. வளர்ந்த பெண்ணின் உரமான காதல் என்பதில் சந்தேகமேயில்லை. அன்று உலகறியாப் பெண்ணாக இருந்தபோது, உங்கள் கதவின் மணியை அடித்தபோது என் நினைவில் எது மறைந்திருந்ததோ அதேதான் இன்னும் என் மனதில் கிடந்து உழல்கிறது. அதுதான் என்னை உங்களுக்கு அர்ப்பணிக்க வேண்டும் என்றது.

என்னுடன் பழகியவர்கள் என்னை வெட்கமும் பயந்த சுபாவமும் உள்ள பெண் என்று கணித்தனர். ஆனல், என்னிடம் நிலையான ஒரு குறிக்கோள் இருந்தது. ஒரு முடிவை நோக்கியே நான் வாழ்ந்து கொண்டிருந்தேன். மீண்டும் வியன்னுவிற்கு—மீண்டும் உங்களிடம்—! மற்றவர்கட்கு நீதியற்றதாகத் தோன்றியபோதும் நான் போராடி வெற்றி பெற்றேன். என் சிறிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தையார் செல்வமுள்ளவர்; என்னைத் தன் மகள்போலப் பார்த்து வந்தார்; ஆயினும் என் செலவிற்கு நானே உழைக்க வேண்டும் என விடாப்பிடியாக நின்றேன். கடைசியில் வியன்னுவிலுள்ள அவருடைய உறவினரின் தையற் கடை ஒன்றில் நான் வேலை செய்வதற்கு இணங்கினுர்.

இறுதியில் நான் வியன்னுவிற்குத் திரும்பிய அன்று மாலையில் என் கால்கள் எங்கே ஓடின என்பதை நான் சொல்ல வேண்டுமா? புகையிரத நிலையத்தில் என் பெட்டிகளை ஒப்படைத்துவிட்டு டிராமை நோக்கி ஓடினேன். அது எவ்வளவு மெதுவாக ஓடியது! ஒவ்வொரு இடத்திலும் தங்கியதும் என் மனம் பொறுமையின்றித் துடித்தது. முடிவில், உங்கள் வீட்டை அடைந்தேன். உங்கள் சன்னல் வழியே ஒளி தெரிந்ததும் என் மனம் குதுகுதுப்பில் மிதந்தது. அந்த நகரமே உயிர் பெற்றதுபோல உணர்ந்தேன். நான் மீண்டும் உயிர் வாழ்ந்தேன். எனது கனவாக இருந்த உங்களருகே வாழ்ந்தேன். ஒளி பட்டு மின்னிக் கொண்டிருந்த மெல்லிய சன்னல் கண்ணுடி மட்டுமே உங்களுக்கும் என் கண்களுக்கும் இடையில் இருப்பதாக நான் எண்ணினேன். ஆனுல், உண்மையில் உங்களைப் பொறுத்தவரையில் மலைகளும் பள்ளத்தாக்குகளும் நம்மைப் பிரித்து நின்றன என்பதை என்னுல் உணர முடியவில்லை. உங்கள் சன்னலைப் பார்த்துக் கொண்டிருப்பதே எனக்குப் போதுமானதாயிருந்தது. அங்கே வெளிச்சமிருந்தது; அதுவே உங்கள் வசிப்பிடம். நீங்கள் அங்கே இருந்தீர்கள். அதுவே என் உலகம். இரண்டு ஆண்டுகளாக இவ்வேளையைப் பற்றி நான் கனவு கண்டு கொண்டிருந்தேன். அவ்வேளை இப்போது வந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டது. மப்பும், புழுக்கமுமாயிருந்த அந்த மாலையில் உங்கள் சன்னலுக்கு முன்னே வெளிச்சம் மறையும் வரை நின்றேன். அதன் பின்னரே என் அறைக்குச் சென்றேன்.

ஒவ்வொரு நாளும், மாலையில் அதே இடத்திற்கு வந்தேன். ஆறுமணி வரை அங்கு வேலை இருந்தது. வேலை கடுமையானதே. உங்கள் அறையில் நடைபெறும் ஒவ்வொரு அசைவும் என் இதயத்தை அசைத்தது. ஆயினும், அதை நான் விரும்பினேன். சன்னல் கதவுகள் எடுத்துவிடும் போது நான் அந்த இடத்திற்கு ஓடுவேன். உங்களை ஒரு தடவை பார்க்க வேண்டும்; காண வேண்டும்; தூரத்திலிருந்தாலும் உங்கள் முகத்தை ஒருமுறை பார்த்துவிட வேண்டும். அது மட்டுமே எனக்கு வேண்டியது.

ஒருவாரத்தின் பின்னர் அங்கு உங்களைச் சந்தித்தேன். அந்தச் சந்திப்பு அப்போது எனக்கு வியப்பூட்டியது. உங்கள் சன்னலைப் பார்த்துக் கொண்டிருந்தபோது, நீங்கள் தெருவில் வந்தீர்கள். ஒரு கணத்தில் நான் மீண்டும் பதின்மூன்று வயதுடைய சிறுமியாகினேன்.

என் கன்னம் சிவந்தது. உங்களின் கண்களில் பட்டுவிட பலகாலமாக நான் துடித்துக் கொண்டிருந்தபோதும், உங்களைக் கண்டதும் தலைகுனிந்து கொண்டே அறியாதவர்போல எட்டி நடந்தேன்.

அன்று உங்களைக் கண்டு தலைகுனிந்து பள்ளி மாணவிபோல ஓடியதை நினைந்து பின்னர் வெட்கமடைந்தேன். எனக்கு வேண்டியது என்ன என்பதை இப்போது அறிவேன். நான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களைச் சந்திக்க விரும்பினேன். இத்தனை துன்பமான காலத்தின் பின்னராவது நீங்கள் என்னை அறிந்து கொள்ளவேண்டும்; இனங் கண்டுகொள்ள வேண்டும்; காதலிக்க வேண்டும் என விரும்பினேன்.

பனி கொட்டும்போதும், மாரிக்காலத்துக் குளிர்காற்று வீசியபோதும் தவறாது ஒவ்வொரு இரவும் உங்கள் வீட்டிற்கு எதிரே உள்ள அந்த இடத்திற்கு நான் வரத் தவறுவதில்லை. ஆயினும் நீண்ட நாட்களாக நீங்கள் என்னைக் கவனித்த தில்லை. சில வேலைகளில் மணிக்கணக்காகக் காத் திருப்பேன். காணமுடிவதில்லை. இறுதியில் நீங்கள் நண்பர்களுடன் வீட்டைவிட்டு வெளி யேறுவீர்கள். இருதடவை ஒரு பெண்ணுடன் உங்களைக் கண்டேன். இப்பொழுது நான் விழிப் படைந்து விட்டேன். புத்தி அறிந்தவளாகி விட் டேன். அறியாத ஒரு பெண்ணுடன் கை கோர்த்துக்கொண்டு நீங்கள் சென்றதைக் கண்ட போது இதயத்தை உலுக்கும் புதிய உணர்ச்சி ஒன்று என்னுள் ஊடுருவிச் சென்றது. நீங்கள் பிற பெண்களுடன் கூடிச் செல்வது எனக்கு அதி சயமான ஓர் காட்சியல்ல. நான் சிறு பெண்ணாக இருந்தபோது இப்படி எத்தனையோபேர் உங்கள் வீட்டிற்கு வந்ததைப் பார்த்திருக்கிறேன். ஆனால், இப்பொழுது பார்த்தபோது உண்மையிலேயே என் நெஞ்சு வலித்தது. மற்றோர் பெண்ணுடன் நீங்கள் உடலுறவு வைத்திருப்பதைக் கண் முன்னே கண்டதும் பொறாமை உணர்ச்சி தலை யெடுத்தது. என் இளமையின் தற்பெருமை ஒரு மாலை உங்களிடம் வருவதைத் தடை செய்தது. ஆனால் அந்த மாலை எத்தனை சூன்யமாகவும் பயங்கரமாகவும் இருந்தது! மறுநாள் இரவு வழமைபோல சன்னலுக்கு எதிரே காத்திருந் தேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதியாக ஒரு நாள் என்னைக் கவனித்துக் கொண்டீர்கள். நீங்கள் தூரத்தில்வரும்பொழுதே உங்களைக் கண்டு விட்டேன். என் பலம் முழுவதையும் திரட்டி, கால்கள் ஓடிவிடாது நீங்கள் வந்தபாதையிலேயே நின்றேன். அதிர்ஷ்டவசமாக பாரமேற்றிய லாரி ஒன்று தெருவில் வந்தது. நீங்கள் என் அருகாமையில் செல்ல நேரிட்டது. உங்கள் கண்களில் என் உருவம் பட்டது. நீங்கள் என் உணர்ச்சி நிலையைக் கவனிக்கவில்லை. உங்கள் முகத்திலே பெண்களை நீங்கள் வழமையாகப் பார்க்கும் அந்த முகபாவம் மிளிர்ந்தது. சிறு பெட்டையாக இருந்த என்னைப் பெண்ணாக்கி உங்கள் காதலியாக்கிய அந்தப் பார்வை. பரிவும் லாவண்யமும் பிணைந்த அந்தப் பார்வை—முதன் முறையாக நீங்கள் பார்த்த அந்தப் பார்வையின் நினைவு வந்து மின்சாரமாகத் தாக்கியது. ஓரிரு கண நேரம் உங்கள்பார்வை என்மீதுபடர்ந்தது. அவ்வேளை என் கண்களை என்னால் அசைக்க முடியவில்லை. பின்னர் நீங்கள் கடந்து சென்றீர்கள். என் இதயம் வேகமாக அடித்துக் கொண்டிருந்தது; கால்கள் தடுமாறின; தடுக்க முடியாத ஆவலுடன் திரும்பிப் பார்த்தேன். நீங்கள் என்னைப் பார்த்துக்கொண்டே நின்று கொண்டிருந்தீர்கள். உங்கள் பார்வையிலிருந்து நீங்கள் என்னை ஊன்றிக் கவனித்ததாகத் தெரியவில்லை. அப்பொழுதுகூட நீங்கள் என்னை அறிந்து கொள்ளவில்லை.

என் ஏமாற்றத்தை எப்படி விஸ்தரிப்பேன்? இப்படியான ஏமாற்றங்களுள் முதலாவது இதுவே. முதல் தடவையாக என் விதியை நொந்தேன். நீங்கள் அறிந்து கொள்ளாமலே நான் இறக்க வேண்டியதுதான். என் ஏமாற்றத்தை நான் எப்படி உங்களுக்குப் புரிய வைக்க முடி

அ. க. 3—327

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும்? இன்ஸ்பர்க்கில் வாழ்ந்த காலத்தில் என்றுமே உங்களைப் பற்றி நான் நினையாதிருந்ததில்லை. வியன்னாவில் ஏற்பட்ட அடுத்த சந்திப்பு என் நினைவில் என்றும் நிலைத்தது. என் ஆசைகள் மன நிலை வாக்கில் மாறின. இன்பம்-ஆறுத் துன்பம் இவற்றிடையே மன நிலை மாறிய துண்டு. நீங்கள் என்னை என்றுமே கவனித்ததில்லை, கவனிக்க மாட்டீர்கள் என்ற நினைவு என்னைப் பயமுறுத்தியது. உங்களிடமிருந்து நான் படித்த தொன்றை இன்று நான் புரிந்து கொண்டேன். ஒரு பெண்ணின் முகம் ஆண்மகனுக்கு மிக விசித்திரமாக மாறிவிடக் கூடியது. கண்ணாடியிலிருந்து பிரதிபிம்பம் மறைவது போல மன நிலையுடன் பெண்களின் முகபாவம் மாறிக் கொள்கிறது. ஒரு பெண்ணின் முகத்தில் ஒளியையும் நிழலையும் வயது மாற்றுவதாலும், வெவ்வேறு வேளைகளில் உடை வெவ்வேறு விதமாக மாறுவதாலும் அவரின் முகத்தை ஓர் ஆண் மகன் விரைவில் மறந்து விடுகிறான். அறிவு வளர வளர பெண் ஒதுங்கி அமைதியாக வாழ்கிறாள். நான் இன்னும் சிறு பெண்ணாக இருந்ததினால் உங்கள் மறதியைப் பற்றி என்னால் உணர்ந்து கொள்ள முடியவில்லை. உங்களை முதன் முதலில் அறிந்த காலம் தொடக்கம் என் சிந்தனை முழுவதிலும் நீங்களே நிறைந்திருந்தீர்கள். இதனால் நீங்கள் என்னைப் பற்றி எண்ணுகிறீர்கள், எனக்காகக் காத்திருக்கிறீர்கள் என்ற ஓர் கற்பனை என்னுள் எழுந்தது. ஆனால், உண்மையில் நான் உங்களுக்கு ஒரு துரும்பாகவும் இல்லை, உங்கள் நினைவிலேயே இல்லை என்று அறிந்த பின்னர் நான் எப்படி வாழமுடியும்? அன்று நீங்கள் பார்த்த பார்வை உங்களுக்கும் எனக்கும் நூலளவில்கூட பிராப்தமில்லை என் பதைக்காட்டியது. அது என்னை யதார்த்த நிலைக்

குக் கொண்டு வந்தது. என் எதிர்காலத்தை அது உணர்த்தியது.

நீங்கள் என்னை உணர்ந்து கொள்ளவில்லை. இருநாட்களின் பின்னர் நாங்கள் மீண்டும் சந்தித்தபோது நீங்கள் என்னை இரகசியமாக அழைப்பது போல இருந்தது. பலகாலமாகக் காதலித்த பெண்ணை புரிந்து கொள்வதாக அந்தப் பார்வை இருக்கவில்லை. இரு நாட்களின் முன்னர் அதே இடத்தில் கண்ட பதினெட்டு வயது நிரம்பிய ஒரு பெண்ணின் அழகான முகத்தைப் பார்ப்பது போலவே தெரிந்தது. உங்கள் முகத்தில் ஆச்சரியக் குறி தெரிந்தது. உதடுகளில் புன்னகை மிளிர்ந்தது. முன்னர் போலவே கடந்து சென்றீர்கள்; மெதுவாக அடிமேலடி எடுத்து வைத்து நடந்தீர்கள். நான் நடுங்கினேன்; குதூகலமடைந்தேன். நீங்கள் என்னுடன் பேசவேண்டுமென்று அவாவுற்றேன். முதல் தடவையாக உங்களுக்காக உயிர் பெற்று எழுந்தது போல உணர்ந்தேன் நானும் மெதுவாக உங்களிடமிருந்து நழுவிவிடாத விதமாக நடந்தேன். திடீரென உங்கள் காலடியோசை பின்புறமாகக் கேட்டது. உங்கள் அன்பான குரல் என்னை அழைக்கும் என்று எதிர்பார்த்தேன். அந்த ஆவல் உந்த, என் உடல் செயலற்று விட்டது. இதயம் வேகமாக அடித்துக் கொண்டது. அசையாது நின்றுவிட வேண்டும் என எண்ணினேன். நீங்கள் அருகே வந்து விட்டீர்கள். முன்னர் உங்களுக்கு என்னைத் தெரியாத போதும், என் வாழ்க்கையைப் பற்றி எதுவுமே அறியாதபோதும், அறிந்தவர் போலக் காட்டி அன்பாக வந்தனம் தெரிவித்தீர்கள். நீங்கள் கூறிய முறை எளிமையாகவும் கவர்ச்சியாகவும் இருந்ததினுல் தயக்கம் எதுவுமின்றி நான் பதில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறினேன். தெருவிலே நாங்கள் நடந்தோம். "இருவரும் ஒருமித்து இரவுணவு உண்ணலாமா" என்று கேட்டீர்கள். நான் ஒப்புக்கொண்டேன். நான் எப்படி மறுப்பேன்?

சிறிய உணவு விடுதி ஒன்றில் உணவுண்டோம். அது எங்கே உள்ளது என்பதை நீங்கள் ஞாபகத்தில் வைத்திருக்க மாட்டீர்கள். இது உங்களைப் பொறுத்த மட்டில் பல நாள் உணவுக் கேளிக்கையில் ஒன்று. ஆனால், எனக்கு? எதிர்பாராத அதிர்ஷடங்களில் ஒன்று. பல நூறில் ஓர் அபூர்வ சந்தர்ப்பம். முடிவில்லாத சங்கிலியில் என் கைக்கெட்டிய ஒரே வளையம். உங்கள் நினைவில் இருக்கக்கூடியதாக அன்று மாலையில் என்ன நடந்தது. நான் குறைவாகவே பேசினேன். உங்கள் அருகே இருப்பதும், நீங்கள் பேசுவதைக் கேட்பதும் எனக்கு அளவிலா மகிழ்ச்சியளித்தது. கேள்விகள் மூலமாகவோ, பைத்தியக்காரத்தனமான வார்த்தைகள் மூலமாகவோ ஒரு கண நேரத்தையும் நான் வீணாக்க விரும்ப வில்லை. உங்களை நான் துதித்து வந்தமைக்குப் பிரதியாகக் கிடைத்த அந்தச் சந்தர்ப்பமே எனக்குப் போதுமானது. அதற்காக நான் என்றும் நன்றி கூறுவேன். நீங்கள் என்னை அழைத்துச் செல்வதற்குக் காட்டிய உங்கள் திறமையை, நான் ஒரு போதும் மறக்க மாட்டேன். அளவு கடந்த ஆவலோ, அவசரத்தில் கூறும் பாசவார்த்தைகளோ அப்போது இருக்கவில்லை. ஆயினும், நீங்கள் காட்டிய சிநேக பூர்வமான அன்பு நான் இத்தனை காலமாக உங்களைப் போற்றி வராதிருந்தாலும் என்னை அடி பணியச் செய்திருக்கும். எனது ஐந்து வருட ஆவல் பூர்த்தியானது. எனக்கு எத்தனை பூரிப்பு ஏற்படுத்தியிருக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதை நான் எவ்வாறு உங்களுக்குப் புரிய வைக்க முடியும்?

நேரம் சென்றது. உணவு விடுதியிலிருந்து நாம் வெளியேறினோம். வாயிலில் வந்ததும் நான் அவசரமாகப் போக வேண்டுமா, அல்லது இன்னும் தாமதித்துச் செல்ல முடியுமா என்று வினவினீர்கள். நான் உங்களுடையவள் என்பதை நான் எப்படி மறைக்க முடியும்? "அவசரம் எதுவுமில்லை. வேண்டிய நேரமுண்டு" என நான் கூறினேன்.

"என் அறையில் போய் சம்பாஷிக்கலாம் வருவீர்களா?"

சிறிது தயக்கத்துடன் என்னைக் கேட்டீர்கள்.

"நான் மிகவும் மகிழ்ச்சியடைவேன்"

என் உணர்ச்சிகளை நேரடியாகத் தெரிவித்து குதூகலமாகப் பதில் கூறினேன்.

தயக்கமற்ற என் சம்மதம் உங்களுக்கு ஆச்சரியமளித்தது என்பதை நான் கண்டுகொள்ளத் தவறவில்லை. மனக் கசப்படைந்தீர்களா மகிழ்ச்சியடைந்தீர்களா என்பதை நான் திடமாகக் கூற முடியாது. ஆனால் நீங்கள் ஆச்சரியப்பட்டீர்கள் என்பது உண்மையே. உங்கள் வியப்பின் காரணத்தை இன்று நன்கு உணர்கிறேன். ஒரு பெண்ணுக்கு ஓராடவனுடன் சேர்வதற்கு எவ்வளவு அவா இருந்தாலும், அதை வெளியே காட்டாது விலை உயர்த்துவது இயல்பு என்பதை இன்று அறிவேன். பொய், போற்றுதல், உறுதி மொழிகள், மன்றாடுதல் ஆதியன மூலமாகவே ஒரு பெண்ணின் சம்மதத்தை ஆண்மகன் பெற வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விபசாரத்தைத் தொழிலாகக் கொண்ட பெண்கள் மட்டுமே கேட்டதும் நேரடியாகச் சம்மதம் தெரிவிப்பார்கள் என்பதை இன்று அறிவேன். விபசாரிகளுடன் பண்பு அடையாத இளம் பெண்களையும் கூறவேண்டும். ஆயிரத்திற்கு மேற்பட்ட நாட்களாக என் மனதில் வளர்ந்த மனவெழுச்சியினுலேயே நீங்கள் கேட்டதும் நான் சம்மதம் தெரிவித்தேன் என்பதை எப்படி நான் உங்களுக்குக் கூறமுடியும்?

எவ்வாருயினும் நான் சம்மதம் கூறிய முறை உங்கள் கவனத்தை ஈர்த்தது. உங்களுக்கு நான் புதிராகவே இருந்தேன். இருவருமாக நடந்து செல்லும்போது உரையாடல் மூலம் நான் என்ன ரகத்தைச் சார்ந்தவள் என்பதை நீங்கள் அறிய முயன்றதை உணர்ந்தேன்.

மனித உணர்ச்சிகளுடன் உங்களுக்கு நல்ல பழக்கமுண்டு. சாதாரணப் பெண்ணிற்கும் எனக்கும் சிறிது வேறுபாடு இருக்கிறது. இப்பெண்ணிடம் ஏதோ இரகசியம் மறைந்திருக்கிறது என்பதைக் கண்டு கொண்டீர்கள். உங்கள் ஆவல் சுடர்விட்டது. என்னுடைய புதிரான இதயத்தைத் திறந்து பார்க்கும் விதமாக உங்கள் வினக்கள் இருந்தன. ஆனுல், நான் தப்பித்துக்கொள்ளும் விதமாகப் பதில் கூறினேன். என் மன இரகசியத்தைக் கூறி பைத்தியக்காரப் பட்டம் பெற நான் விரும்பவில்லை.

உங்கள் மாடிக்குச் சென்ருேம். உங்களுடன் படிக்கட்டு வழியே ஏறி மேலே செல்லும்போது ஏற்பட்ட இன்பவெறி தாங்காது நான் எவ்வாறு அவஸ்தைப்பட்டேன் என்பதை நீங்கள் ஒரு போதும் புரிந்துகொள்ளமாட்டீர்கள். இவ்வாறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பச்சையாகச் சொல்வதற்காக என்னை மன்னியுங்கள். இப்போதும் அதை நினைக்குமுன்னரே என் கண்களில் நீர் துளிர்க்கும்.

ஆனால், என் கண்கள் கண்ணீரின்றி வறண்டு விட்டன. அவ்வீட்டிலுள்ள ஒவ்வொரு பொருளும் என் ஆசைக்குள் மறைந்திருந்தது. ஒவ்வொன்றும் சிறுமியாக இருந்தபோது என் ஆர்வத்தை வளர்த்த சின்னங்களாகும். நான் மறைந்து நின்று ஆயிரம் தடவை பார்த்தகதவு இருந்தது. உங்களை முதல் தடவையாகப் பார்த்த—உங்கள் காலடிச் சத்தங்களைக் கேட்ட—படிக்கட்டுகள் இருந்தன. நீங்கள் வந்து போவதை என்றும் காத்திருந்து பார்த்த கதவின் துவாரத்தைக் கண்டேன்.

நான் முழங்காலில் ஒரு முறை நின்று உங்கள் கதவடியிலுள்ள மிதிகம்பளம் ஒலி மூலம் உங்கள் வரவை அறிவிக்கும் கதவின் சாவியாவையும் கண்டேன். என் குழந்தைப் பருவ ஆசைகள் யாவும் அந்த சில கஜ தூரங்களிடையே இருந்தன. என்னைச் சூழ்ந்து புயல் வீசி, என் வாழ்வு முழுவதும் பூரணத்துவம் அடைந்ததாக உணர்ந்தேன். நான் உங்களுடன் செல்கிறேன். நான் உங்களுடன், உங்களுடைய ...எங்களுடைய வீட்டிற்குள் நுழைகிறோம். சிந்தித்துப் பாருங்கள். (நான் சிறு விஷயத்தைக் கூறுவதுபோலவே சொல்லுகிறேன். இதைத் தவிர வேறு வார்த்தைகள் என்னிடம் இல்லை.)

உங்கள் கதவு வரையே என் நிஜ உலகம் இருந்தது. அதுவரை காலமும் வாழ்ந்த தெளிவில்லாத வாழ்வு என் முற்பிறவி வாழ்வாகும். என் சிறு வயதுக் கற்பனையில் மிளிர்ந்த உலகம் கதவிற்குள்ளே இருந்தது. பல ஆயிரம் தடவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களாக சுடர்விடும் கண்களுடன் நான் பார்த்த கதவைக் கடந்து செல்லுகிறேன். என் தலை கிறு கிறுக்கிறது. உங்கள் மனதில் மெல்லிய உணர்ச்சி. அவ்வளவுதான் அந்த நிமிடம் எனக்கு எத்தனை பெரிதாக இருந்தது!

அன்றிரவு நான் உங்களுடன் தங்கினேன். என் உடலை முன்னர் எவரும் தொட்டதோ பிறந்த மேனியில் கண்டதோ இல்லை என்பதை நீங்கள் கனவிலும் கருதி யிருக்கமாட்டீர்கள். நான் சிறிதும் மறுப்போ, எதிர்ப்போ தெரிவிக் காதபோது நீங்கள் எப்படி எண்ண முடியும்? என் காதலின் இரகசியம் வெளிப்பட்டுவிடுமோ என அஞ்சி என் வெட்க உணர்ச்சி அனைத்தையும் அடக்கிக்கொண்டேன். அது உங்களுக்கு நிச்சய மாக ஆச்சரியமா யிருந்திருக்கும். இலகுவாக வந்து போகிறவர்கள் பற்றியே நீங்கள் கவனிப் பீர்கள். தொட்டதும் வருபவற்றை இலகுவில் அளந்துவிடலாம்.

பிறருடைய வாழ்வின் எல்லைக்குள் நுழைய நீங்கள் விரும்பியதில்லை. உங்களை உலகத்திற்கு இலவசமாகக் கொடுக்க நீங்கள் தயாராயிருந்தீர் கள். ஆனல், எந்தத் தியாகமும் செய்வதற்காக வல்ல. நீங்களாக என் கவர்ச்சியில் விழுந்ததல்ல; என்னை ஏமாற்றியதல்ல. என்னுடன் கூடிய தல்ல. நானுகவே உங்கள் கரங்களில் வீழ்ந் தேன். என் விதியைத் தீர்மானிக்க முயன்றேன். அந்த இரவின் இன்பத்திற்காக நான் நன்றி கூறுவதல்லாது வேறில்லை.

இருளிலே கண்விழித்தபோது நீங்கள் என் அருகே இருந்தீர்கள். நான் வானத்தில் இருப்பதாக எண்ணினேன். விண்மீன்கள் ஒளி வீசாதது எனக்கு விசித்திரமாக இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பரே, அன்றிரவு என்னை உங்களுக்கு அர்ப்பணித்ததற்காக நான் ஒருபோதும் வருந்தியதில்லை. என்னருகே நீங்கள் தூங்கிக்கொண்டிருந்தபோது உங்கள் மூச்சின் ஒலியை நான் கேட்டேன்; உங்கள் உடலைத் தொட்டேன். நீங்கள் எனக்கு அருகே இருப்பதை உணர்ந்து, ஆனந்தக் கண்ணீர் வடித்தேன்.

அதிகாலையில் நான் போய்விட்டேன். வேலைக்கு நான் போக வேண்டியிருந்தது. மேலும் உங்கள் வேலையாள் வருமுன்னர் வெளியேற எண்ணினேன். நான் வெளியேறத் தயாரானதும், உங்கள் கரத்தால் என்னைச் சுற்றி அணைத்து நீண்டநேரம் என்னைப் பார்த்துக்கொண்டிருந்தீர்கள். மங்கிய நினைவு உங்கள் சிந்தனையைக் கலங்கச் செய்ததா? அல்லது நாணுக வரிந்து தந்தஇன்பம் என்னை அழகாகக் காட்டியதா? நீங்கள் என் உதட்டில் முத்தமிட்டீர்கள்; நான் புறப்பட்டேன்.

"சில மலர்கள் எடுத்துச்செல்ல விரும்புவீர்களா?"

நீங்கள் கேட்டீர்கள். நீங்கள் உட்கார்ந்து எழுதும் மேசையிலுள்ள மலர்க் குவளையில் நான்கு வெண் ரோசா மலர்கள் இருந்தன. (முன்னரேயே நான் சிறுமியாக இருந்தபோது அதைப் பார்த்திருந்தேன்) நீங்கள் அம்மலர்களை என்னிடம் தந்தீர்கள். பல நாட்கள் அவற்றை என்னுடன் வைத்து முத்தமிட்டேன்.

மற்றோர் மாலையும் சந்திக்க உடன்பட்டிருந்தேன். மீண்டும் புதுமையும் மகிழ்வும் நிரம்பி வழிந்தது. மூன்ருவது முறையாகவும் ஓரிரவு அழைத்தீர்கள். பின்னர் வியன்னுவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டு வெளியே செல்ல வேண்டியிருப்பதாகத் தெரிவித்தீர்கள். உங்கள் வெளியூர் பிரயாணங்களை நான் எப்படி வெறுத்தேன் என்பதைக் கூறமுடியாது!

நீங்கள் திரும்பியதும் எனக்கு அறிவிப்பதாக வாக்குறுதி யளித்தீர்கள். நான் என் உண்மைப் பெயரை உங்களுக்குச் சொல்லவில்லை; போஸ்டாபீஸ் (மேல் பார்த்த) விலாசமே தந்திருந்தேன். என் இரகசியத்தை நான் காப்பாற்றினேன். பிரியும்போது மீண்டும் ரோசா மலர்கள் தந்தீர்கள்.

இருமாதங்களாக ஒவ்வொரு நாளும் நான் என்னையே கேட்டுக்கொண்டேன்... நான் எதிர்பார்த்திருந்த ஆவலையும் ஏமாற்றத்தையும் இங்கு விவரிக்க விரும்பவில்லை. நான் எவ்வித குற்றச்சாட்டும் சுமத்தவில்லை. நான் உங்களைக் காதலிக்கிறேன். முன்னர் காதலித்தது போலவே காதலிக்கிறேன். இருமாதங்கள் முடிய முன்னரே நீங்கள் வீடு திரும்பிவிட்டீர்கள். உங்கள் சன்னல் வெளிச்சம் சுட்டியது. ஆனால் நீங்கள் எனக்கு எழுதவில்லை. என் கடைசி நேரத்தில் உங்கள் கையெழுத்தில் ஒருவரிதானும் என்னிடம் இல்லை. என் வாழ்வையே அர்ப்பணித்த உங்களிடம் இருந்து ஒருவரியும் இல்லை. நான் காத்திருந்தேன்; சவிப்படையும் வரை காத்திருந்தேன். நீங்கள் என்னை அழைக்கவில்லை. ஒருவரி எழுதவில்லை. ஒருவரிகூட...!

நேற்று இறந்த என்னுடைய பையன் உங்களுடைய பையனே. அவன் உங்கள் மகன். அந்த மூன்று இரவுகள் தந்தபிள்ளை. நான் உங்களுடையவள்; அவன் பிறக்கும் வரை உங்களுடையவளாகவே இருந்தேன் உங்கள் ஸ்பரிசத்தால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் பரிசுத்த மடைந்தேன். அதனுல் வேறு எந்த ஆண்மகனது ஆதரவையும் பெற என்னுல் முடியவில்லை. அன்பரே, அவன் எங்கள் பையன்; என்னுடைய மனப்பூர்வமான காதலினுல் பிறந்த பிள்ளை. எங்கள் மகன்; எங்கள் பிள்ளை. நீங்கள் அதிர்ச்சியடையலாம்; ஆச்சரியப்படலாம். நான் பையனைப் பற்றி ஏன் இவ்வளவு காலமும் சொல்ல வில்லை; திரும்ப முடியாத இடத்திற்குச் சென்ற பின்னர், இறுதித் தூக்கத்தில் கிடக்கும்போது மட்டும் ஏன் சொல்ல வேண்டும்? நீங்கள் வியப் படையலாம். ஆனுல் நான் எப்படிச் சொல்ல முடியும்? நான் உங்களுக்கு ஓர் அந்நியப் பெண்; அந்த மூன்று இரவுகள் மட்டும் உங்களுடன் கழிக்க விரும்பியதாகக் காட்டிக் கொண்டவள். எப்படிக் கூற முடியும்? பெயர் கூருது உங்க ளுடன் கூடி வந்தவள் எப்படி விசுவாசமாக இருந்திருப்பாள் என்று நீங்கள் எண்ணியிருப் பீர்கள். நீங்கள் ஒருபோதும் நம்பியிருக்க மாட் டீர்கள். உங்கள் பிள்ளை என்று இவனை ஒரு போதும் ஒப்புக் கொண்டிருக்க மாட்டீர்கள்; அவனது உருவத்தைப் பார்த்து என் வார்த் தையை ஓரளவு நம்பினுலும், நான் தக்க நிலை யிலுள்ள ஒருவரைப் பிடித்துக் கொள்ளுவதற்கு இச் சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திக் கொண்டி ருக்கலாம்—வேறு காதலனின் பிள்ளையாயிருக்க லாம்—என்ற சந்தேகம் உங்கள் மனதில் உதிக் கவே செய்யும். நீங்கள் நிச்சயமாக சந்தேகப் பட்டிருப்பீர்கள். நம்பிக்கையின்மையின் நிழல் எம்மிடை எப்பொழுதும் இருந்திருக்கும்: நான் அதைத் தாங்கியிருக்க மாட்டேன். மேலும் உங்களை நான் அறிவேன். நீங்கள் உங்களைப் பற்றி அறிந்திருப்பதிலும் பார்க்க நான் உங்களை அதிகமாக அறிவேன். நீங்கள் இதயபாரம் எதுவு மின்றி சுதந்திரமாக வாழ விரும்புபவர். காதலைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றியும் நீங்கள் இவ்வாறே எண்ணிக் கொண்டிருக்கிறீர்கள். திடீரென நீங்கள் தந்தையின் நிலைக்கு வந்து விட்டீர்கள் என்ற செய்தி ஒரு பிள்ளையின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் பொறுப்புணர்ச்சியைத் திடீரென ஏற்றுக்கொள்வதென்ற எண்ணம் உங்களுக்கு அதிர்ச்சியளித்திருக்கும். சுதந்திரம் என்ற மூச்சே உங்கள் ஜீவன். நான் உங்களுக்குத் தடையாக வருவதாக உணர்ந்திருப்பீர்கள். உள் மனதிலே நீங்கள் என்னை வெறுத்திருப்பீர்கள். ஒருமணித்தியாலமோ, சில நிமிடங்களாவது நான் உங்களுக்குப் பாரமாக இருந்திருக்க மாட்டேனு? வெறுத்திருக்க மாட்டீர்களா? என் வாழ்க்கை முழுவதும் நான் உங்களுக்கு எவ்வித சிரமமும் தராது வாழ்ந்ததையிட்டு நான் பெருமைப் படுகிறேன். உங்களுக்குப் பொறுப்பாக இருப்பதிலும் பார்க்க நானே முழுப்பொறுப்பையும் தாங்கிக் கொள்ள எண்ணினேன். உங்களுடன் அன்னியோன்னியமாகப் பழகிய எல்லாப் பெண்களிலும் பார்க்க நான் தனிப் பெண்ணுக வாழ விரும்பினேன். உண்மையில் நீங்கள் என்னைப் பற்றி என்றும் எண்ணியதேயில்லை, நீங்கள் மறந்து விட்டீர்கள்.

நான் உங்கள்மீது குற்றம் சுமத்தவில்லை. என்னை நம்புங்கள். நான் குறை கூறவில்லை. இப்பொழுதோ பின்னரோ என் பேனு ஏதாவது தவறு செய்திருக்கலாம். அப்படியானுல் என்னை மன்னித்துக்கொள்ளுங்கள். என் பையன், நம் பையன் அதோ சுடர் விட்டெரியும் மெழுகு வர்த்திகளருகே இறந்து கிடக்கிறுன். அதனுல் நான் அறியாது தவறு செய்தால் என்னை மன்னித்துக் கொள்ளுங்கள். நான் துன்பம் தாங்காத நிலையில் கைகளைப் பொத்திக் கொண்டே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''கொலைகாரா'' என்று கடவுளுக்கெதிராக கை நீட்டினேன். உங்களிடம் இப்போது முறையிடுவதற்காக மன்னித்துக் கொள்ளுங்கள். நீங்கள் இளகிய இதயம் படைத்தவர்கள். எவருக்கும் உதவத் தயாராயிருப்பவர் என்பதை நான் அறிவேன். எந்த அன்னியருக்கும் ஒரு வார்த்தையில் நீங்கள் உதவ முற்படுவீர்கள். உங்கள் இரக்கம் விசித்திரமானது; எல்லையில்லாதது. இருகையாலும் உங்களை எவ்வளவில் பிடித்துக் கொள்ள முடியுமோ அத்தனையளவு உங்களை யாரும் வென்று விடலாம். ஆயினும் உங்கள் இரக்கச் செயல்கள் பயனற்றவை என்றே கூறுவேன். எவரும் வாய்விட்டு உதவி கேட்க வேண்டும் என எதிர்பார்க்கிறீர்கள். கேட்பவர்க்குத்தான் உதவுகிறீர்கள். வெட்கத்தினுல் உங்களிடமுள்ள குறைபாட்டினுல் நீங்கள் உதவி செய்கிறீர்கள். பிறருக்கு உபகாரம் செய்வதை ஒரு இன்பமாக எண்ணி நீங்கள் உதவுவதில்லை. சந்தோஷமாக வாழ்பவர்கள் மேல் காட்டும் அன்பு போல, துன்பம் கஷ்டம் உள்ளவர்களிடம் நீங்கள் அன்பு காட்டுவதில்லை என்பதை நான் வெளிப்படையாகக் கண்டேன்.

ஏழைகள் உங்களிடம் கை நீட்டி யாசிக்கும் போதெல்லாம் நீங்கள் அவர்கள் முகத்தையே பாராது பணத்தைக் கொடுப்பதை நான் பார்த்திருக்கிறேன். இதய பூர்வமான இரக்கத்தில் நீங்கள் பிச்சை கொடுப்பதில்லை. ஏழைகளிடமிருந்து தப்பிக் கொளவதற்காகவே, அவர்களைப் பாராது பணத்தைக் கொடுத்துச் செல்வதை நான் கவனித்திருக்கிறேன்.

என் வயிற்றில் குழந்தை ஜனித்தஉடனே அச்சம் ஏற்பட்ட போதும் பின் பூரிப்பும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமையுமடைந்தேன். இந்த நல்ல செய்தியை தங்களிடம் சொல்ல அஞ்சினேன். சொல்லியிருப் பின் நீங்கள் என்ன செய்திருப்பீர்கள், என்ன வழிகாட்டி யிருப்பீர்கள என்பதை என்னுல் உணர்ந்து அறிய முடிந்தது.

கர்ப்பத்தில் வளரும் குழந்தையை நினைத்த போதெல்லாம் தங்களை என்னிடத்தே நிரந்தர மாக சிறைப்பிடித்த உணர்வே பின்னர் ஏற்பட் டது. ஏனெனில் நான் என் ஆத்மா சாந்தியடை யும்வரை உங்களைப் பேண முடியும்; உணவூட்ட முடியும்; முத்தமிட முடியும். அதனுல்தான் குழந்தை ஜனித்ததை அறிந்ததும் மிகவும் மகிழ்ச்சி யடைந்தேன். அதனுலேயே அச் செய்தியை இரகசியமாகவும் வைந்திருந்தேன். அதன் பின்னர் நீங்கள் என்னிடமிருந்து தப்பி விட முடிய வில்லை. நீங்கள் என்னுடையவரானீர் கள்.

ஆனுல் ஆரம்பத்தில் நான் கனவு கண்டது போல இன்பமாக ஓடியதாக எண்ணிவிடா தீர்கள். துன்பங்களும் கஷ்டங்களும் என்னைச் சூழ்ந்தன. அடிப்படைத் தேவைகளுக்கு மிகவும் இன்னலுற்றேன். யாவும் கஷ்டமாகியது. கடைசி மாதங்களில் வேலையிலும் தொடர்ந்து இருக்க முடியவில்லை. வேலைத் தலத்திலுள்ள சிறிய தந்தையாரின் உறவினர் வீட்டிற்கு செய்தியைத் தெரிவித்து விட்டனர். அம்மாவிடமும் பணம் கேட்க முடியவில்லை. குழந்தை பிறக்கும் நாள் வரை சிறு விளையாட்டுச் சமான்களை விற்று அத னுல் வந்த சிறு ஊதியத்தில் வாழ்ந்தேன். குழந்தை பிறப்பதற்கு ஒரு வாரத்திற்கு முன்னர் என்னிடமிருந்த சிறு பணத்தை வண்ணுத்தி திருடிவிட்டாள். அதனுல் நான் இலவச மருத்துவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனைக்குச் செல்ல நேரிட்டது. ஏழைகளிடையே, சாதி குறைந்தவர்களிடையே, தேடுவாரற்ற அநாதைகளிடையே உங்கள் மகன் அந்த அசுத்தமான அரசாங்க ஆஸ்பத்திரியில் பிறந்தான். அந்த இடம் பயங்கரமாக இருந்தது, அங்கிருந்த அனைவரும் ஒருவருக்கொருவர் அன்னியராயிருந்ததினால் தனிமையிலேயே இருந்தோம். குருதி வடிதலும், குளோரபாம் நாற்றமும், முக்கலும் அழுகையும் நிறைந்த அந்த நெருக்கமான வார்டில் ஒருவரை யொருவர் நாம் வெறுத்த போதிலும் வறுமையும் வசதியின்மையும் எம்மைப் பிணைத்த.... அந்த வார்டுகளிலுள்ள நோயாளிகள் தனித்துவத்தையே இழந்து விடுகின்றனர். ஆஸ்பத்திரியின் தலைமைப் பீடத்தில் மட்டும் அனைவரது பெயரும் தனித்தனியே எழுதப் பட்டிருக்கும். கட்டிலில் கிடப்பது, வைத்தியக் கல்லூரி மாணவர் படிப்பதற்குரிய ஒரு மனித உருவம்; சதைப் பிண்டம்...

இவற்றைப் பற்றி எல்லாம் சொல்வதற்காக என்னை மன்னிக்கும்படி வேண்டுகிறேன், அவற்றைப்பற்றி நான் இனிமேல் பேசமாட்டேன். பதினொரு வருடங்கள் நான் ஊமையாக வாழ்ந்தேன்! விரைவில் நித்ய ஊமையாகி விடுவேன். இந்தப் பிள்ளையை, இந்த இன்பத்தை நான் எவ்வளவு அன்பாக வளர்த்தேன் என்பதை ஒரு முறையாயினும் உங்களிடம் கூறி அழவேண்டும். அது ஆறுதல்தரலாம். அதற்காகவே எழுதுகிறேன். அவன் இப்போது இறந்து கிடக்கிறான். முன்னர் நான் அடைந்த பயங்கரமான துன்பங்களை இவனது சிரிப்பில், இனிய குரலைக் கேட்பதனால் ஏற்படும் மகிழ்ச்சியில் மறந்து விட்டேன். அவன் இறந்ததும் பழைய துன்பங்கள் மீண்டும் உயிர்பெற்றெழுகின்றன. நான் அவ்வேதனைகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறவேண்டியிருக்கிறது. ஆனால் நான் உங்கள் மேல் குற்றம் சுமத்தவில்லை. கடவுள் மேலேயே சுமத்துகிறேன். பயனில்லாத இத்தகைய துன்பத்திற்கு கடவுள் மட்டுமே காரணஸ்தராகும். நான் ஒருபோதும் உங்கள்மேல் கோபம் வளர்த்ததில்லை. பிரசவ வேதனையின் போது கூட நான் உங்கள் மேல் வெறுப்புக் கொண்டதில்லை. உங்கள் காதலைச் சுவைத்த அந்த இரவுகளுக்காக கூட நான் வருந்தியதில்லை. நான் உங்களைக் காதலிப்பதை என்றும் விட்டதில்லை. நீங்கள் என் வாழ்வில் நுழைந்ததை என்றும் போற்றாது விடவுமில்லை. இதற்காக நான் நரகத்தில் வாழ வேண்டுமாயினும் மகிழ்ச்சியோடு - ஒரு தடவையல்ல, பல தடவைகள் வாழத் தயாராயிருக்கிறேன்.

எங்கள் பையன் நேற்று இறந்து விட்டான். உங்களுக்கு அவனை என்றுமே தெரிய மாட்டாது. அவனது அழகு ஒளிரும் சிறிய உடலை நீங்கள் என்றுமே தழுவியதில்லை. உங்கள் கண்கள் அவன்மேல் என்றும் பதிந்ததில்லை. எங்கள் மகன் பிறந்த பின்னர் நீண்ட காலமாக நான் உங்களிடமிருந்து மறைந்திருந்தேன், உங்களைக் காணவேண்டும் என்ற ஆவல் முன்னரிலும் குறைந்திருந்தது. உண்மையாகவே, உங்கள் மேலிருந்த காதலுணர்ச்சி குறைந்ததாகவே எண்ணுகிறேன். பையன் இருந்தால் உங்கள் காதல் என்னை அவ்வளவு துன்புறுத்தவில்லை. உங்களுக்கும் அவனுக்குமிடையே என்னை நான் பங்கு போட விரும்பவில்லை. நீங்கள் சந்தோஷமாக வாழ்ந்தீர்கள், அதனாலேயே உங்களுக்கு என்னை மீண்டும் அர்ப்பணிக்க நான் விரும்பவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனுக்கு உணவுகொடுக்க, விளையாட்டுக் காட்ட, முத்தம் கொடுக்க நான் தேவைப்பட்டேன். உங்களுக்காக அமைதியற்றுத்துடித்த என் மனம் ஓரளவு ஆறிவிட்டது. உங்கள் மறு உருவம் என் சொந்தமாக இருந்ததால் என்னை மூடியிருந்த கல்லறை தகர்ந்து விட்டது. உங்கள் வீட்டிற்கு வந்து உங்களுடன் சேரவேண்டும் என்ற உணர்ச்சி அருமையாகவே தோன்றியது. உங்கள் பிறந்தநாளன்று மட்டும் நீங்கள் எனக்கு அன்று தந்ததை போன்ற வெண் ரோஜாமலர்க் கொத்து ஒன்று ஒழுங்காக அனுப்பி வந்தேன். இந்தப் பத்துப் பதினொரு வருடங்களில் இந்த மலர்களை யார் அனுப்பினார்கள் என்று நீங்கள் உங்களையே கேட்டிருக்கிறீர்கள்? இப்படியான ரோஜாக்களை முன்னர் ஒரு பெண்ணுக்குக் கொடுத்ததை நினைவு படுத்திப் பார்த்திருக்கிறீர்களா எனக்குத் தெரியாது. என்றுமே தெரியாது. உங்கள் அறியாமைக் கிடையே, அந்த மலர்கள் அனுப்புதலே எனக்குத் திருப்தியாக இருந்தது. ஆண்டுக்கொரு தடவை, உங்களுடன் கழித்த அந்த நேரத்தை மலர்கள் மூலம் நினைவு படுத்திப் பார்த்தேன்.

உங்களுக்கு எங்கள் பையனைத் தெரிய மாட்டாது. உங்களிடமிருந்து அவனை மறைத்து வைத்திருந்தமைக்கு இன்று வருந்துகிறேன். நீங்கள் கட்டாயமாக அவன்மேல் அன்பு காட்டி இருப்பீர்கள். தூக்கம் விட்டு கண் திறந்ததும் அவன் உதிர்க்கும் புன் முறுவலை நீங்கள் என்றும் பார்த்ததில்லை. அக்கரிய விழிகள் உங்களுடைய கண்களே. அவற்றால் அவன் குதூகலத்தோடு என்னையும் உலகத்தையும் பார்த்தான். அவன் நல்ல விவேகி. கண்டவர் எவரையும் கவர்ந்து விடுவான். அவனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயதிற்கு ஏற்றவாறு, உங்கள் இளகிய மனமும், கற்பனையோட்டமும் அவனிடம். இருந்தன. நீங்கள் வாழ்க்கையுடன் விளையாடுவதுபோல அவன் மணிக்கணக்காக விளையாட்டுப் பொருட்களுடன் விளையாடிக்கொண்டிருப்பான்.

பின்னர் சிரத்தையோடு நீண்ட நேரம்புத்தகங்கள் படிப்பான். அவன் மறுஉருவம் நீங்களேதான். உங்களிடமுள்ள விளையாட்டு ஆர்வம் அவனிடமும் இருந்தது. உங்களுடைய சாயலையும் குணத்தையும் அதிகமாகக் காணக்காண அவனை நான் அதிகமாகக் காதலித்தேன். படிப்பில் அவன் கெட்டிக்காரன். பிரெஞ்சு மொழியும் பேசுவான். வகுப்பிலே அவனுடைய அப்பியாசப் புத்தகமே மிகவும் துப்புரவானது. எத்தனை அருமையான சிறிய மனிதன்! வேனிற் காலத்தில் கிறேடோ கடற்கரைக்கு நான் அழைத்துச் செல்லும்போது பெண்கள் இடையில் மறித்து அவனது அழகான தலைமயிரை வருடி விடுவர். கடற்கரையில் நடந்து செல்லும்போது அனைவரும் அவனையே திரும்பிப் பார்ப்பர். அவன் அத்தனை அழகும் கவர்ச்சியும், மென்மையும் உள்ளவன். சென்ற ஆண்டு விடுதியிலிருந்து கற்பதற்காக கல்லூரிக்குச் சென்ருன். 18ம் நூற்ருண்டுப் போர் வீரனைப் போல கல்லூரி யூனிபாமை அணியத் தொடங்கினன். இன்று இதோ மூடப்பட்ட உதடுகளுடனும் சிலுவை போல குறுக்கே விழுந்துவிட்ட கைகளுடனும் கிடக்கிருன்.

இத்தனை செலவான முறையில் நான் எப்படி அவனை வளர்க்க முடிந்தது? செல்வாக்குடைய பிள்ளை போல நல்ல எதிர்காலத்திற்கு எப்படி வழிகோல முடிந்தது என்றெல்லாம் எண்ணி நீங்கள் ஆச்சரியமடையலாம். அன்பரே, நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருட்டில் இருந்து கொண்டே உங்களுடன் பேசுகிறேன். வெட்கம் சிறிது மில்லாமல் நான் சொல்கிறேன். என்னிடம் அருவயை அடைய வேண்டாம். நான் என்னை விற்றேன். தெரு விலே திரிபவளாக-சாதாரண விபசாரியாக நான் மாறவில்லை. என்னை விற்றேன். என் நண்பர்கள், காதலர்கள் பெரிய செல்வர்களாவர். ஆரம்பத்தில் நான் செல்வர்களிடை காதலர் தேடினேன். பின்னர் நான் அழகியாக இருந்தமையால் அவர் களாகவே என்னை நாடிவந்தனர். நீங்கள் எப் பொழுதாவது என் அழகைக் கவனித்ததில்லையா? நான் கூடிச்செல்ல உடன்பட்ட ஒவ்வொருவரும் எனக்கு நன்றியடையவராக மாறினர். எல்லோ ரும் என்னைப் பாராட்டினர்; புகழ்ந்தனர். உங் களைத் தவிர. நான் காதலித்த உங்களைத் தவிர அவர்கள் அனைவரும் என்னைக்காதலித்தனர்.

நான் என்ன செய்தேன் என்பதைக் கூறி யமைக்காக என்னை வெறுப்பீர்களா? நீங்கள் ஒரு போதும் என்னை வெறுக்க மாட்டீர்கள் என்றே எண்ணுகிறேன். நீங்கள் என்னை என் செயல் களைப் புரிந்து கொள்வீர்கள் என நம்புகிறேன். நான் உங்களுக்காக, உங்கள் பையனுக்காகவே இவற்றைச் செய்தேன். வறுமையின் கொடு மையை நான் ஆஸ்பத்திரியில் கிடந்தபோது கண் டேன். ஏழைகளின் உலகத்தில், மேல் நிலையி லிருந்துதிடீரென வீழ்ந்தவர்களே பலியாவார்கள் என்பதை அறிவேன். உங்கள் ஆசை மகன் சதுப்பு நிலத்து நச்சுக்காற்றிடையே, தெருக் களிலே கேவல வாழ்வு வாழ்வதை என்னல் நினைத்தும் பார்க்க முடியவில்லை. அவனது மெல்லிய உதடுகள் தெருப் பாஷையைப் பேசு வதை நான் விரும்பவில்லை. அவனது மேன்மை யான உடல் அழுக்கான, கரடுமுரடான உள்ளங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டும் அணிந்து கொள்வதை நான் வெறுத்தேன். உங்கள் மகன் உலகிலுள்ள சிறந்த பொருட்களையும் எல்லாச் செல்வத்தையும், இனிய மனத்தையும் பெறவேண்டும். நீங்கள் வாழ்ந்தவாழ்வை அவன் வாழவேண்டும்; உங்கள் அடிச்சுவட்டை அவன் தன் வாழ்வு முழுவதும் தொடர வேண்டும். இவை என் ஆசைகள்.

அதனாலேயே நான் என்னை விற்றேன். தியாகம் செய்தேன் என்று நான் கூற விரும்பவில்லை. என்னைப் பொறுத்த வரையில், மானம், "மானக்கேடு" என வழமையாகக் கூறப்பட்டு வரும் வார்த்தைகள், அர்த்தமற்றவையாகத்தோன்றின. என் உடல் உங்கள் ஒருவருக்கு மட்டுமே உரிமையானது. ஆனால் நீங்கள் என்னைக் காதலிக்கவில்லை. ஆகவே அந்த உடலை நான் என்ன செய்தால்தானென்ன? என் வாடிக்கையாளர் பலர் என்னை மனமாரக் காதலித்தனர். ஆயினும் அவர்களின் காதல் என் இதயத்தின் அடித்தளத்தைத் தொடவில்லை. அவர்களுக்கு நான் மரியாதை மட்டுமே செலுத்த முடிந்தது. என் விதியை நொந்து அவர்கட்காக வருந்தினேன். அவ்வளவுந்தான். எல்லோரும் எனக்கு நல்லவர்களாகவே இருந்தனர். அனைவரும் என்னைத் தம் விளையாட்டுப் பொருளாக தடவிக் கொடுத்துக் கெடுத்தனர். எல்லோரும் தாராளமாகப் பணம் தந்தனர். மனைவியை இழந்த வயதான பட்டதாரி ஒருவர் தம் செல்வாக்கைப் பயன்படுத்தி பையனுக்கு கல்லூரியில் இடம் பெற்றுக்கொடுத்தார். தம்மகளைப் போல இந்த மனிதர் என்னில் அன்பும் செலுத்தினர். மூன்று நான்கு தடவைகள் தம்மைத் திருமணம் செய்யும்படி வேண்டினர். நான் இன்னேர் சீமாட்டியாகியிருக்கலாம். தைரோலிலுள்ள மாளிகை ஒன்றின் எஜமானி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாகி யிருக்கலாம். பையனுக்கும் பாசமுள்ள ஒரு தந்தை கிடைத்திருக்கும். நானும் கவலேயற்றிருப் பேன். இளகிய இதயமும், சீரும் சிறப்புமுள்ள அவர் என் கணவராகி யிருப்பார். அவருக்கு மன வேதனை அளித்த போதும், நான் திடமாக மறுத்தே வந்தேன். என் செயல் பைத்தியகாரத் தனமாக இருக்கலாம். நான் சம்மதித்திருப்பின் பாதுகாப்பான, அமைதியான வாழ்வு வாழ்ந் திருக்கலாம். என் பிள்ளையும் என்னோடு வாழ்ந் திருப்பான். நான் மறுத்தமைக்குரிய காரணத்தை உங்களிடமிருந்து நான் ஏன் மறைக்கவேண்டும்? என்னை நான் கட்டுப்பாடு உள்ள நிலேயில் வைத்துக்கொள்ள விரும்பவில்லே. உங்களுக்காக என்றும் சுதந்திரமாக இருக்க விரும்பினேன். என் ஆத்மாவிற்குள்ளே, அறிவின் செயலற்ற நிலேயுள்ளே, சிறு பிராயத்திய கனவுகளேத் தொடர்ந்து கண்டு கொண்டிருந்தேன். ஒரு நாள், ஒருமணி நேரத்திற்காவது உங் களுடனே இருக்கும்படி அழைப்பீர்கள் என்று நான் கனவு கண்டு கொண்டிருந்தேன். இந்த ஒருமணி நேரம் என்றோ ஒரு நாளாவது கிட்ட லாம்; அவ்வேளே நீங்கள் அழைததும் நான் வரக்கூடிய சுதந்திரம் இருக்க வேண்டும் என்ற எண்ணத்தில் அனைத்தையும் நான் மறுத்தேன். என் பெண்மை உணர்வு விழித்துக் கொண்ட அன்று தொடக்கம் உங்களுக்காகக் காத்திருந்தது தவிர நான் எதுவுமே செய்யவில்லேயே!

இறுதியில் நான் எதிர்பார்த்திருந்த நேரம் வந்தது. நாம் சந்திக்கும் அவ்வேளே வந்ததாக அப்போதும் உங்களுக்குத் தெரியாது! நீங்கள் என்னை இனம் கண்டு கொள்ளவில்லே. ஒரு போதும் நீங்கள் என்னேத் தெரிந்து கொண்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மில்லை. தியேட்டர்களில், களியாட்டு விழாக்களில் பலதடவை நான் உங்களைச் சந்தித்தேன். அவ் வேளைகளிலெல்லாம் என் இதயம் துடித்தது. நீங்கள் அத்துடிப்பை அறியாதவராக என்னைக் கடந்து சென்றீர்கள். பல உருவில் நான் வேறு பெண்ணுகிவிட்டேன். பயந்த பெட்டையாக இருந்த நான் பெரிய மனுஷியாகி விட்டேன். என்னைப் பார்த்து அழகி என்று அனைவரும் கூறினர். சுற்றிவர, என்னைப் போற்றுபவர் களிடையே, அழகான உடைகளில் பவனி வந் தேன். உங்கள் படுக்கையறையின் மங்கிய ஒளியிலே நாணமுள்ள பெண்ணுக நீங்கள் பார்த் திருக்க கூடியவள் இன்று எப்படி அடையாளம் கண்டு கொள்ள முடியும்? சில வேளைகளில் என்னை அழைத்து வருபவர் உங்களுக்கு வந் தனம் தெரிவிப்பார். நீங்களும் பதிலாக வந்தனம் தெரிவிக்கும்போது என்னைப் பார்த்திருக்கிறீர்கள். ஆனல். உங்கள் பார்வை அந்நியரைப் பார்க்கும் கண்ணியமான பார்வையாகவே யிருக்கும். தொலை தூரத்திலே, மிகத் தொலைவிலே நீங்கள் இருந்தீர்கள். வழமைபோல நீங்கள் என்னை அறிந்து கொள்ளாது இருந்தது ஒரு முறை எனக்குப் பெரும் வேதனை தந்தது.

நாட்டியக்கச்சேரியொன்று பார்க்க நண்பர் ஒருவரோடு நான் வந்திருந்தபோது, நீங்கள் என் அருகாமையில் இருந்தீர்கள். நடனம் ஆரம்பித்ததும் ஒளி மங்கியது. உங்கள் முகத் தைப் பார்க்க முடியவில்லை. உங்கள் அறையில் முன்பு இருந்ததுபோல, உங்கள் சுவாசத்தை என் அருகே உணர்ந்தேன். உங்கள் கரம் என் அருகே இருந்தது. முன்னரும் ஸ்பரிசித்துப் பழகிய அந்தக் கரத்தை குனிந்து முத்தமிட என் மனம் துடிதுடித்தது. நாட்டிய இசையின் ஒலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் ஆவலை மேலும் தூண்டியது. என் மனத்தைக் கல்லாக்கி, என் உதடுகள் உங்கள் அன்புக் கரத்தை ஸ்பரிசிக்காது தடுத்துக் கொண்டேன். முதற்காட்சி முடிந்ததும் நான் வெளியேற விரும்புவதாக என் நண்பரிடம் தெரிவித்தேன். இருளிலே என் அருகே நீங்கள் இருப்பதை என்னால் சகித்துக்கொள்ள முடியவில்லை.

ஆனால், நான் எதிர்பார்த்த அந்தச் சந்தர்ப்பம் மீண்டும் ஒரு முறை வந்தது. ஒரே ஒரு முறைதான். ஒரு வருடத்தின் முன்னர்—உங்கள் பிறந்த நாளின் மறுநாள். முன்னிருந்ததிலும் பார்க்க என் நினைவுகள் உங்களுடன் அதிகமாக விளையாடிக்கொண்டிருந்தன. உங்கள் பிறந்த நாளென்றால் அது எனக்கோர் திருவிழாத்தானே? உங்களுடன் கழித்த (நீங்கள் மறந்துவிட்ட) நேரத்தை நினைவு கூர்வதற்காக ஆண்டுதோறும் பிறந்த நாளன்று அனுப்பும் வெண் ரோசா மலர்கள் வாங்குவதற்கு அன்று காலையில் சென்றேன். மாலையில் பையனை அழைத்துக் கொண்டு காரில் சுற்றினேன். பின்னர் இருவரும் தேநீர் அருந்தினோம். மாலையில் தியேட்டருக்குச் சென்றோம். அந்த நாளை, ஆண்டுதோறும் இளமையைக் கொண்டாடும் ஒரு நாளாகக் கருதும்படி நான் அவனிடம் சொல்வதுண்டு. அவனுக்கு உண்மைக் காரணம் தெரியாது. மறு நாளை என்னுடன் காதல் கொண்டிருந்த ஒரு சிநேகிதருடன் கழித்தேன். அவர் இளமையும் செல்வமுமுள்ள பெரிய தொழிலதிபர். சென்ற 2 ஆண்டுகளாக நான் அவருடன் தொடர்புகொண்டிருந்தேன். அவருக்கு என்மேல் பாசமும் பற்றுமுண்டு. அவரும் என்னை மணக்க விரும்பினார். நான் மறுத்தேன். காரணத்தை அவரால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளங்கிக்கொள்ள முடியாதபோதும், எனக்கும் மகனுக்கும் அன்பளிப்புகளாக கொண்டுவந்து குவிப்பார். அவரின் அடிமைத்தனமான காதல் அவர்மேல் அன்புகொள்ளத் தூண்டியது. அன்று நாங்கள் ஒரு களியாட்ட விழாவிற்கு சென்ருேம். அங்கு ஒரு குதூகலமான குடும்பத்தாரைச் சந்தித்தோம். ஒரு ஓட்டலில் நாங்கள் இரவுணவைச் செலவிட்டோம். பேச்சுகளும் சிரிப்புகளும் ஒலித்தன. அதற்கிடையே நடனமாடும் மண்டபத்திற்குச் செல்வோம் என அவர்களே அழைத்தேன். பொதுவாக நடனமாடும் இடங்களிலுள்ள கேளிக்கைகளும் குதூகலமும் மது வெறியினுல் ஏற்படுவதால் நான் இந்த இடங்களே விரும்புவதில்லே. நான் அரிதாகவே செல்வதுண்டு. இந்தத் தருணம் ஏதோ ஒரு சக்தி என்னைத் தூண்டியது. மற்றவர்களேயும் அழைத்தேன். அனைவரும் மகிழ்வுடன் வந்தனர். புதிய அனுபவம் ஒன்றை எதிர்பார்ப்பதுபோன்று காரணம் கூறி முடியாத ஆவல் ஒன்று என்னை உந்திக் கொண்டிருந்தது. வழமைபோல என் விருப்பத்திற்கு அனைவரும் இசைவதுண்டு, நடனமாடும் மண்டபத்திற்குச் சென்ருேம். அங்கு ‘சம்பெயின்’ அருந்தினேம். முன்னர் என்றும் நான் சுகித்திராத குதூகலம் என்னுள் எழுந்தது. பின்னர் ஒரு கிண்ணம் மாறி மறு கிண்ணமாக ‘வைன்’ அருந்தினேன். கோரஸ் பாடிக்கொண்டிருந்தவர்களுடன் சேர்ந்து நானும் பாடினேன். நடனம் ஆடவேண்டுமென்ற உணர்வு உந்திக்கொண்டிருந்தது. பின்னர் திடீரென ஒருகண நேரம் என் இதயம் பனிக்கட்டி பட்டது போலவோ எரிதழல் பட்டது போலவோ குதித்தது. அடுத்த மேசையில் நீங்கள் சில நண்பர்களுடன் இருந்தீர்கள். என்னைப் பாராட்டுபவர் போல உங்கள் பார்வை இருந்தது. அந்தப் பார்வை சொல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லொணு துடிப்பை என்றும் என்னுள் ஏற்படுத்திய அதே பார்வையாகும். பத்து வருடங்களின் பின்னர் என்னை முதன் முதலாகப் பார்த்தீர்கள். இயற்கையாக, உங்களை அறியாது, உங்களிட முள்ள பால் இனக் கவர்ச்சி அதில் தெரிந்தது. நான் நடுங்கினேன். என் கையிலிருந்த மதுக் கிண்ணம் கை தவறி விழுந்துவிடப் போகு மளவில் என் கரம் நடுங்கியது. நல்ல வேளையாக என் நிலையை என் நண்பர்கள்எவரும் கவனிக்க வில்லை. அவர்களின் கவனம் கேளிக்கைகள் சிரிப்புகளிடையேயும், இசை வெள்ளத்திடை யேயும் மூழ்கிக் கிடந்தது.

உங்கள் பார்வை என் மேலேயே தொடர்ந்து இருந்தது. என் உணர்வுகளை அது தொட்டு எரித்தது. என்னை நீங்கள் தெரிந்துகொண்டு விட்டீர்களா அல்லது அந்நியப் பெண்ணுக எண்ணி ஆசை கொண்டுள்ளீர்களா என்பதை என்னுல் தீர்மானிக்க முடியவில்லை. என் கன் னங்கள் சிவந்தன. உங்கள் பார்வை என்னை எவ்வண்ணம் தாக்கியது. என்பதை நீங்கள் கண்டுகொள்ளாதிருக்கவில்லை' நீங்கள் தலையை அசைத்து ஒருகணம் வெளியே வரும்படி அழைத் தீர்கள். பின்னர் நீங்கள் பில்லுக்குப் பணத்தைச் செலுத்திவிட்டு, நண்பர்களிடம் விடைபெற்றுக் கொண்டீர்கள். வெளியே காத்திருப்பதாக மீண்டும் ஒரு முறை சைகை செய்துவிட்டு நீங்கள் சென்றீர்கள். காய்ச்சல் ஏற்பட்டு பின்னர் குளிராக்கிய நிலையில் நான் நடுங்கிக் கொண்டி ருந்தேன். அதன் பின்னர் என்னுல், பேசுபவர் கட்குப் பதில் கூற முடிய வில்லை; என் இரத்தக் கொதிப்பைக் கட்டுப் படுத்த முடியவில்லை. அவ் வேளையில் இரு நீக்ரோக்கள் அநாகரிகமான முறையில் தங்களது வளமையான இச்சிட்ட சத்

தத்துடன் நடனமாடினார்கள். எல்லோரும் அவர்களைப் பார்க்கத் திரும்பினார்கள். இச்சந்தர்ப்பத்தை நான் பயன்படுத்திக் கொண்டேன். ஒரு கணத்தில் திரும்பி விடுவதாக என் காதலரிடம் தெரிவித்து விட்டு, உங்களைத் தொடர்ந்தேன்.

நீங்கள் வாயிலில் காத்துக் கொண்டு நின்றீர்கள். என்னைக் கண்டதும் உங்கள் முகம் பிரகாசித்தது. உதட்டில் புன்னகையுடன் என்னைச் சந்திக்க அவசரமாக வந்தீர்கள். சிறு பிள்ளையாகவோ, முன்னர் சந்தித்த பெண்ணாகவோ என்னை நீங்கள் அடையாளம் கண்டு கொள்ளவில்லை. மீண்டும் புதிதாகப் பழகும் பெண்ணாகவே கருதினீர்கள்.

"என்னோடு ஒரு மணி நேரத்துக்கு வர முடியுமா?"

நம்பிக்கையான குரலுடன் கேட்டீர்கள். எவரும் ஓரிரவுக்கு வாங்கிவிடக் கூடிய பெண்ணாகவே என்னையும் கருதினீர்கள் என்பது உங்கள் குரலில் தெரிந்தது.

"ஆம்."

என் உச்சரிப்பும் குரலும் பத்து ஆண்டுகளுக்கு முன்னர் நீங்கள் வீட்டு எதிரில் கேட்ட போது நான் பதில் கூறியது போலவே ஒலித்தது.

"நாங்கள் எப்பொழுது சந்திக்கலாம் என்பதைச் சொல்லுங்கள்?"

நீங்கள் கேட்டீர்கள்.

"நீங்கள் விரும்பும் போது"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் பதிலளித்தேன். உங்களைப் பொறுத்த வரையில் வெட்கம் என்பதே எனக்குத்தெரியாது. நீங்கள் சிறிது வியப்புடன் பார்த்தீர்கள். முன்னர் நீங்கள் கேட்டபோது நான் தயக்கம் சிறிதுமின்றி இணங்கிய வேளையில் எத்தனை சந்தேகமும் ஆவலும் உங்களிடம் இருந்ததோ அதே போலவே உங்கள் திகைப்பு இம் முறையும் இருந்தது.

"இப்பொழுது?"

ஒரு கணம் தயங்கி விட்டுக் கேட்டீர்கள்.

"ஆம். நாங்கள் போகலாம்."

நான் பதில் கூறினேன்.

என் போர்வையை ஓட்டல் வாயிலிலுள்ள உடுப்பு அறையிலிருந்து எடுத்துவர நினைத்தேன். என்னை அழைத்து வந்த காதலர் தன் பொருட்களுடன் என்னுடைய போர்வையையும் கொடுத்து ஒருடிக்கட் பெற்றது அப்போதுதான் ஞாபகம் வந்தது. அவரிடம் சென்று கேட்கவும் முடியாது. நான் பல வருடங்களாக எதிர்பார்த் இந்த வேளையையும் விட்டு விட முடியாது. ஒரு கணத்திலே நான் முடிவு செய்தேன். பனிப் படலம் சூழ்ந்த அந்த இரவில் எதையுமே பொருட்படுத்தாது அவருடன் சென்றேன். என் போர்வையை அல்ல, என்னுடன் இரு ஆண்டுகளாக வாழ்ந்த இளகிய இதயமுடைய அந்த நல்ல மனிதரை, நண்பர்களிடையே அவமானம் அடையும் நிலையில் விட்டு, ஒரு அறியாதவரின் தலையசைப்பிற்கு உடன் பட்டுச் சென்றேன். செய்நன்றி கொன்றவளாக அந்தக் காதலரை எவ்வாறு கேவலப் படுத்துகிறேன் என்பதை என் இதயம் அறிந்திருந்தது. என் வாழ்வுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் விஷப் பரீட்சை செய்கிறேன் என்பதையும், இனிமேல் அந்தக் காதலர் என்னைக் கைவிட்டு விடுவார் என்பதையும் அறிவேன். ஆனுல் உங்களுடைய உதடுகளின் உணர்ச்சியுடன் உங்கள் குரல் வேறுபாடுகளையும் கேட்டுச் சுவைக்கக் கூடிய இந்தச் சந்தர்ப்பத்துடன் ஒப்பிடும்போது அந்தக் காதலரின் நட்பு எங்கே? என் வாழ்வு தான் எதற்கு? இப்பொழுது எல்லாம் முடிந்து விட்டபடியால் நான் உங்களுக்கு இதைச் சொல்லுகிறேன். நான் உங்களை எப்படிக் காதலித்தேன் என்பதை தெரிவிக்கிறேன். மரணப் படுக்கையிலிருந்து நீங்கள் அழைத்தாலும், உங்கள் அழைப்பை ஏற்று எழுந்து வருவதற்குரிய பலம் எனக்கு ஏற்படும் என நம்புகிறேன்.

கதவின் ஓரமாக டாக்ஸி ஒன்று நின்றது. அதில் ஏறி, உங்கள் அறைக்குச் சென்ருேம். மீண்டும் ஒரு முறை உங்கள் குரலைக் கேட்க முடிந்தது. உங்கள் அருகே இருக்கிறேன் என்ற இன்பத்தில் திளைத்தேன். இன்ப வெறியில் நீண்டகாலமாக உங்களுடன் இருந்தது போன்ற மனக்குழப்பம் ஏற்பட்டது. பத்து ஆண்டுகளின் பின்னர் மீண்டும் உங்களுடன் சேர்ந்து படிக்கட்டில் ஏறச் சந்தர்ப்பம் கிடைத்தது எவ்வாறு எனக்கு இன்பமளித்தது என்பதை நான் விரித்துக் கூற முடியாது. உங்கள் அறைகளில் அதிக மாற்றம் எதுவும் ஏற்படவில்லை. தொங்கும் படங்களின் எண்ணிக்கை சிறிது அதிகரித்திருந்தது. புத்தகங்களும் அதிகரித்திருந்தன. ஓரிரு தளபாடங்களும் கூடியிருந்தன. முந்திய பழக்கத்திஞல் ஏற்பட்ட நட்புறவோடு அவற்றைப் பார்த்தேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் இருந்து எழுதும் மேஜைமேல் மலர்க் குவளையில் ரோஜா மலர்கள் இருந்தன. நீங்கள் அறியாத நினைவுகூர முடியாத ஒருபெண் அனுப்பினளே அதே மலர்கள்தான். அவளை நீங்கள் அறிந்து கொள்ளவில்லை. உங்கள் அருகே அவள் நிற்கும் போது-நீங்கள் அவள் கரத்தைப் பிடிக்கும் போது—உதடுகளுடன் உங்கள் உதடுகளைப் பதிக்கும் போதுகூட நீங்கள் அவளைத் தெரிந்து கொள்ளவில்லை. ஆனல், என் மலர்கள் அங்கே இருப்பதைக் கண்ட காட்சியும், என்னிடமிருந்து வந்த பொருளை நீங்கள் போற்றிக் காப்பாற்றி யிருக்கிறீர்கள் என்பதைத் தெரிந்து கொண்டதும் எனக்கு ஆறுதலளித்தது. அம் மலர்களின் நறுமணம் உங்கள் மேல் நான் கொண்ட என் காதலின் மூச்சாகும்.

நீங்கள் என்னை உங்கள் கரங்களில் தூக்கி யணைத்தீர்கள். மீண்டும் ஒருமுழு இரவையும் உங்களுடன் கழித்தேன். ஆனல், அப்போதும் என்னை நீங்கள் அறிந்து கொள்ளவில்லை. உங்கள் அணைப்பில் நான் திளைத்திருந்தபோது ஒரு விஷயத்தை நன்கு அறிந்து கொண்டேன். உங்களைப் பொறுத்தவரையில் உண்மையாக உங்களைக் காதலிக்கும் ஒரு பெண்ணுக்கும், அழகு மட்டும் உள்ள போலிப் பெண்ணுக்கும் எவ்வித வேறுபாடுமில்லை. உங்கள்வழமையான செயல்கள் அவற்றைத் தெரிவித்தன. நடன மண்டபத்தி லிருந்து அழைத்து வந்த அந்நியப் பெண்ணை எனக்கு நீங்கள் உடனேயே அன்புமரியாதையும் காட்டத் தொடங்கினீர்கள். என்மேல் உங்கள் முழு ஆசையையும் அன்பையும் காட்டினீர்கள். அன்று நான் அடைந்த இன்பத்தை முந்திய இன்பத்துடன் ஒப்பிட்டுப் பார்த்தேன். உங்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளிடம் அமைந்துள்ள அறிவுணர்ச்சி, உடலு ணர்ச்சி ஆகிய இரண்டும் கலந்த விசித்திரமான இன்ப வேறுபாட்டை அன்று உணர்ந்தேன். முன்னரும் இவற்றிற்கே நான் பலியானேன். வேறு எந்த ஆண்மகனிடமும் இத்தனை இன்பம் நான் அடைந்ததுமில்லை. இன்பத்திற்காக நான் இப்படி என்னை எவருக்கும் தந்ததுமில்லை. உங்களைப்போல, வேறு எந்த ஆண்மகனும் அவ் வேளையில் என்னிடம் சரணடைந்ததில்லை. அவ் வேளை கழிந்ததும், மனித நிலையை மறந்து உங்களைப்போல ஓய்வடைந்தவர் எவரையும் நான் காணவில்லை. ஆனால் நானும் என்னை மறந் தேன். இருளிலே உங்களருகே கிடக்கும் நான் யார்? முந்திய, ஆசை உணர்ச்சியற்ற சிறுபெண் நானா? உங்கள் மகனின் தாயார் நானா? நான் அந்நியப் பெண்ணா? அந்த மகத்தான இரவில், ஒரே நேரத்தில், யாவும் பழையன போலவும், புதியன போலவும் இருந்தன. அந்த இன்பம் என்றும் நிலைக்க வேண்டும் என விரும்பினேன்.

விடிந்தது. நாங்கள் எழுந்தபோது நேரம் போய்விட்டது. நீங்கள் காலை உணவு முடித்துச் செல்லும்படி வேண்டினீர்கள். தேநீர் அருந்திக் கொண்டே அமைதியாக உரையாடினோம். முன் போலவே நீங்கள் ஒளிவு மறைவின்றிப் பேசி னீர்கள். முன்போலவே அவசியமற்ற கேள்விகள் எதுவுமில்லை. என்னைப் பற்றி நீங்கள் எதுவும் அறிய ஆவல் கொண்டதில்லை. என் பெயரையோ, நான் வசிக்குமிடம் பற்றியோ நீங்கள் எதுவுமே வினவவில்லை. உங்களுக்கு வழமைபோலவே இதோர் புதிய அனுபவம். தீரச்செயல். பெயர் தெரியாத பெண்ணுடன் கழித்த நேரம். அவ் வளவுமே. நேரம் கழிந்ததும் உங்களிடம் ஒரு களங்கமுமில்லை. நீண்ட பிரயாணம் செய்ய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பதாகவும், இரண்டு மூன்றுமாதங்களை வட ஆபிரிக்காவில்கழிப்பதாகவும் நீங்கள்கூறினீர்கள். ''கழிந்தவை, கழிந்தவை, கழித்தவை, மறந்தவை.''—வார்த்தைகள் என் இன்பத்தை உடைத்தன.

''என்னையும் அழைத்துச் செல்லுங்கள். என்னை என்றே ஒரு நாள் தெரிந்து கொள்வீர்கள்.''

உங்கள் காலில் வீழ்ந்து அழ விரும்பினேன். ஆனால் நான் கோழை. அடிமையாக, பலமற்று இருந்தேன்.

''என்ன அரிய சந்தர்ப்பம்''

இப்படி மட்டுமே என்னால் கூற முடிந்தது.

''நீங்கள் உண்மையிலேயே வருந்துகிறீர்களா?''

புன்னகையுடன் கேட்டீர்கள்.

ஒரு கணம் பைத்தியம் பிடித்தவளை போலானேன். எழுந்து நின்று உங்களைப் பார்த்தேன்.

''நான் காதலித்தவர் எல்லா வேளையுமே பயணம் சென்று விடுகிறார்.''

பின்னர் இவ்வாறு கூறினேன். உங்கள் கண்களைப் பார்த்தேன்.

''இப்போது, இப்போது என்னை அடையாளம் கண்டு கொள்வார்'' என்று எண்ணினேன்.

''சில காலத்தின் பின்னர் பயணம் சென்ற எவரும் திரும்பி விடுவர்''

நீங்கள் புன்னகையுடன் ஆறுதல் கூறினீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆம் திரும்பி வருவார்தான். ஆனல், அப் போது மறந்து விடுவார்"

நான் பதில் கூறினேன்.

நான் உணர்ச்சி வசப்பட்டுப் பேசியிருக்க வேண்டும். ஏனெனில் என் குரல் உங்களை அசைத்து விட்டது. நீங்களும் எழுந்து என்னைப் பார்த்தீர்கள். உங்கள் பார்வையில் திகைப்பும், மென்மையும் ஒளிர்ந்தன.

"நல்லவைகள் ஒருபோதும் மறக்கப்படுவ தில்லை. நான் உங்களை மறக்க மாட்டேன்"

உங்கள் கரங்களை என் தோள்களில் போட்டுக் கொண்டே சொன்னீர்கள். என் உரு வத்தை உங்கள் சிந்தனையில் காப்பாற்ற விரும் பியவர்போல உங்கள் கண்கள் என்னைக் கவன மாகப் பார்த்தன. அந்த ஊடுருவும் பார்வையை, என் உருவம்முழுவதையும் ஆராயும் பார்வையைக் கண்டதும் உங்கள் அறியாமை மறைந்துவிடும் என்ற ஒரு சிறு நப்பாசை ஏற்பட்டது.

"அவர் என்னை அறிந்து விடுவார். அடை யாளம் கண்டு கொள்வார்"

என் ஆத்மா நம்பிக்கையில் வளர்ந்தது.

ஆனல் நீங்கள் அடையாளம் கண்டுகொள்ள வில்லை. இல்லை, நீங்கள் தெரிந்து கொள்ளவே யில்லை. நான் அவ்வேளையைப் போல உங்களுக்கு என்றுமே மிகவும் தூரத்திய அந்நியராகதெரிந்த தில்லை. இல்லாவிட்டால் அடுத்த சில நிமிடங் களில் நீங்கள் மீண்டும் என்னை முத்தமிட்டீர்கள். மீண்டும் என்னை முத்தமிட்டீர்கள். மிகவும் ஆசை யோடு முத்தமிட்டீர்கள். என் தலைமயிர் குலைந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டும் நான் தலைவார நேரிட்டது. கண்ணுடியின் முன் நின்று நான் உங்கள் செயலைக் கண்டேன். நீங்கள் சில நோட்டுகளை என் சட்டையின் பாக்கெட்டுள் தள்ளிக் கொண்டிருந்தீர்கள். இதைக் கண்டதும் வெட்கமும், ஆத்திரமும் பீறிட்டன. வாய்விட்டு அழவேண்டும் போலிருந்தது. உங்கள் கன்னத்தில் அறைந்துவிட வேண்டும் போலுமிருந்தது. சிறு வயதிலிருந்து காதலித்த எனக்கு, உங்கள் மகனின் தாயாகிய எனக்கு, உங்களுடன் கழித்த இரவிற்கு பணம் தருகிறீர்கள். உங்களுக்கு நான் நடன மண்டபத்திலிருந்து தேர்ந்தெடுத்த ஒரு விபசாரி. என்னை மறந்து விடுவது மட்டும் உங்களுக்குப் போதாது. எனக்குப் பணமும் கொடுக்க வேண்டும். இவ்வாறு என்னைத் தொலைத்துவிட எண்ணினீர்கள் அப்படித்தானே?

வேதனை தாங்க முடியாத நிலையில் விரைவில் வெளியேறுவதற்காக என் பொருள்களை எடுத்துக் கொண்டேன். என் தொப்பியைத் தேடிச் சுற்றி வரப் பார்த்தேன். எழுதுகிற மேஜை மேலுள்ள வெண்ரோசாக்களுக்கு — என் ரோசா மலர்களுக்குப் பின்னுக இருந்தது. உங்கள் ஞாபக சக்தியை விழிப்படையச் செய்வதற்கு கடைசி முறையாக முயல வேண்டுமென ஓரெண்ணம் என்னைத் தூண்டியது.

"உங்கள் ரோசா மலர்களில் ஒன்றைக் தருவீர்களா?"

"தாராளமாக."

எல்லா மலர்களையும் கையில் எடுக்கொண்டே பதில் கூறினீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இவற்றை ஒரு பெண் - உங்களேக் காதலிக்கும் ஒரு பெண் தந்திருக்க வேண்டும்."

"இருக்கலாம். எனக்குத் தெரியாது. அன்பளிப்பாக வந்தவையே. ஆனுல், யார் அனுப்பினுர்கள் என்றுதான் தெரியவில்லே. அதனுல்தான் நான் இவற்றை மிகவும் விரும்புகிறேன்"

நீங்கள் சொன்னீர்கள்.

"நீங்கள் மறந்துவிட்ட ஒரு பெண் அனுப்பியிருக்கலாம்."

நான் வேண்டுமென்றே உங்களேப் பார்த்தேன்.

நீங்கள் ஆச்சரியமடைந்தீர்கள். மேலும் கூர்மையாக நான் உங்களேப் பார்த்தேன்.

"என்னே அறிந்து கொள்ளுங்கள். கடைசியாகவாயினும் அறிந்து கொள்ளுங்கள்" என்று என் கண்கள் துடிதுடித்தன. ஆனுல், உங்கள் புன்னகையிலிருந்து நீங்கள் என்னேக் கண்டுகொள்ள வில்லே என்பதை அறிந்து கொண்டேன். நீங்கள் மீண்டும் என்னே முத்தமிட்டீர்கள்; ஆயினும் என்னே இனம் கண்டு கொள்ளவில்லே.

நான் அவசரமாக வெளியேறினேன். என் கண்களில் நீர் நிறைந்தது; அதை நீங்கள் பார்ப்பதை நான் விரும்பவில்லே. அறையிலிருந்து வெளியே வந்ததும் உங்கள் வேலேயாள் ஜோனுடன் மோதிவிட இருந்தேன். சிறிது தயக்கமடைந்தபோதும், மரியாதையாக வழி விட்டுச் சென்று முன் கதவை அவன் திறந்து விட்டான். அந்த அவசர நேரத்தில் கண்களில் நிறைந்திருந்த கண்ணீருக் கூடாக அவனேப் பார்த்தேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் முகத்திலே திடீரென ஒளி படர்ந்தது. அந்த ஒரு கண நேரத்தில் அவன் என்னைக் கண்டு கொண்டான். சிறு வயதில் என்னைக் கண்ட பின்னர் என்றுமே காணாத அவனே என்னைத் தெரிந்து கொண்டான்.

அவனது நன்றியுணர்விற்காக அவன் முன்னே முழந்தாளில் நின்று அவன் கரங்களை முத்தமிட்டிருக்கலாம். நீங்கள் பாக்கெட்டுக்குள் தள்ளிய நோட்டுக்களை எடுத்து அவன் கையில் திணித்தேன். அவன் வியப்போடு என்னைப் பார்த்தான். உங்கள் வாழ்நாள் முழுவதிலும் நீங்கள் என்னைப் புரிந்துகொண்டதிலும் பார்க்க அவன் அதிகமாக என்னைப் பற்றி அந்த ஒரு கணத்தில் விளங்கிக் கொண்டான். ஒவ்வொரு வரும், ஒவ்வொருவரும் என்னைக் கெடுக்க விரும்பினார்கள். ஒவ்வொருவரும் என்மேல் தம் அன்பை அள்ளி வீசினர். ஆனால் நீங்கள்-நீங்கள் ஒருவர் மட்டுமே என்னை மறந்தீர்கள், நீங்கள் மட்டுமே என்னை என்றும் தெரிந்து கொண்டதில்லை.

என் பையன்-நம் மகன் இறந்து விட்டான். நான் காதலிப்பதற்கு எவருமில்லை; உங்களைத் தவிர, இன்று எனக்கு எவருமில்லை. ஆனால் என்னை என்றுமே அறிந்து கொள்ளாத நீங்கள் எனக்கு என்ன செய்ய முடியும்? நீரோடையிலிருந்து கால்களை வெளியே எடுத்து ஒதுங்கி நிற்பது போல என்னையும் கண்டு ஒதுங்கி நின்றீர்கள். கல்லெறியிலிருந்து தப்புவதுபோல எண்ணி, என்னிலிருந்து தப்பித்துக் கொண்டீர்கள். என்னை அந்திம காலம் வரை உங்கள் காதலுக்காகக் காத்திருக்க விட்டு விட்டு, நீங்கள் உங்கள் மார்க்கத்தில் மறைந்து சென்று விட்டீர்கள்; அப்போது நீங்கள் எவ்வாறு உதவமுடியும்? உங்களை என் சொந்தமாக்கிக் கொள்ள வேண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று ஒரு காலம் ஆசைப்பட்டேன். பின்னர் குழந்தையாக உங்களை வைத்திருந்தேன். அவன் உங்கள் மகனேதான். இரவில் அவன் இரக்கம் எதுவுமின்றி என்னைத் தனியே விட்டு விட்டுச் சென்று விட்டான். அவன் இனிமேல் திரும்ப மாட்டான். மீண்டும் நான் தனித்து விட்டேன். ஒரேயடியாகத் தனிமையாகி விட்டேன். உங்களுடைய பொருளாக இப்போது என்னிடம் எதுவுமில்லை, குழந்தை இல்லை; உங்களிடமிருந்து ஒரு வார்த்தை இல்லை. கையால் எழுதிய ஒரு வார்த்தை-ஓர் எழுத்து இல்லை. உங்கள் நினைவிலும் நான் இல்லை. உங்கள் முன்பு யாராவது என் பெயரைச் சொன்னால் அது உங்களுக்கு அறியாத பெயராகவே யிருக்கும். உங்களைப் பொறுத்த வரையில் நான் இறந்து விட்டேன். ஆகவே நான் இறப்பதற்கு சந்தோஷமடைய வேண்டுமல்லவா? நீங்கள் என்னிடமிருந்து போய்விட்ட படியால் நானும் போய்விட விரும்ப வேண்டுமல்லவா?

அன்பரே! நான் உங்களைக் குறை கூற வில்லை. நான் என் துயரங்களை உங்கள் இன்ப மான வாழ்க்கைக்குள் நுழைக்க விரும்ப வில்லை. நான், இனிமேல் என்றாவது உங்களைத் தொல்லைக் குள்ளாக்குவேன் என்று எண்ணி நீங்கள் அஞ்ச வேண்டாம். என் பையன் இறந்து கிடக்கும் இத் துன்ப வேளையில் என் இதயத்தின் அழுகையை இந்த ஒரு முறை மட்டும் பொறுத்துக் கொள் ளுங்கள் இந்த ஒரு முறையே நான் உங்களுடன் பேச விரும்பினேன். பின்னர் நான் முன்னர் போலவே ஊமையாகி—உங்கள் பாதையிலிருந்து மறைந்து விடுவேன். நான் வாழும்வரைகூட என் அழுகையை நீங்கள் கேட்க மாட்டீர்கள். வேறு எவரும் காதலிக்காத விதமாக இதய பூர்வ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மான ஆழத்துடன் காதலித்த ஒரு பெண்ணிட மிருந்து—நீங்கள் எப்போது அழைப்பீர்கள் என்று என்றுமே காத்திருந்த போதும், நீங்கள் ஒருபோதும் அழையாத, அறிந்து கொள்ளாத பெண்ணிடமிருந்து இந்தக் கடிதம் நான் இறந்த பின்னரே உங்களுக்குக் கிட்டும்.

சில வேளை இக்கடிதம் கிடைத்ததும் நீங்கள் என்னிடம் வருவீர்கள்; முதல் தடவையாக அப் பொழுதே நான் நன்றிகெட்டவளாக இருப்பேன். உங்கள் அழைப்பை மரணப் படுக்கையிலிருந்து நான் கேட்க முடியாது. உங்களுடைய படமோ வேறு அடையாளமோ எதுவும் என்னிடம் இல்லை. நீங்கள் எதுவுமே எனக்குத் தரவில்லை. ஆகவே நீங்கள் அப்போதும் என்னைத் தெரிந்து கொள்ள மாட்டீர்கள். என் வாழ்வின் விதி அதுவே. சாவிலும் அதுவேதான் என் விதி. கடைசி வேளையிலும் நான் உங்களை அழைக்க மாட்டேன். என் பெயரோ உருவமோ அறியாத வகையில் நான் உங்களை விட்டுச் செல்வேன். மரணம் எனக்கு மிக இலகுவானது. ஏனெனில் நீங்கள் தூரத்திலிருந்து அதை உணர மாட்டீர் கள். என் மரணம் உங்களுக்குத் துன்பம் தருவ தாயின் நான் இறக்க ஒருபோதும் விரும்ப மாட் டேன்.

இதற்கு மேல் என்னால் எழுதமுடியாது. என் தலை கனக்கிறது; உடல் வலிக்கிறது; நோய் வேகம் கொள்ளுகிறது. நான் படுக்க வேண்டும். யாவும் விரைவில் முடிந்து விடலாம். என் பிள்ளை யைப் பறித்து சென்ற விதி என்னளவில் நன்றி யுடையதாயிருக்கலாம்... என்னால் இதன் மேல் எழுத முடியாது. சென்று வருகிறேன். அன்பரே! சென்று வருகிறேன். என் நன்றி அனைத்தும் உங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்கு உரியது. தொல்லேகள் இருந்த போதும் நடந்தவை யாவும் நன்மைக்கே. என் கடைசி மூச்சு வரை நான் உங்களுக்கு நன்றி செலுத்து வேன். அனேத்தையும் உங்களுக்குக் கூற முடிந்த தில் மிக்க மகிழ்ச்சி. நான் எவ்வாறு உங்களேக் காதலித்தேன் என்பதை முற்றுக உங்களால் ஒரு போதும் புரிந்து கொள்ள முடியாது; ஆயினும் உங்களுக்கு இப்போது ஓரளவுக்குத் தெரியலாம். என் காதல் ஒரு போதும் உங்களுக்குத் தொல்லே யாக இருக்க மாட்டாது. இது உறுதி நான் சொல்லுத்தவறமாட்டேன். சிறப்பும் இன்பமும் பொருந்திய உங்கள் வாழ்க்கையில் எதையும் மாற்றி விட மாட்டேன். அன்பரே, என் மரணம் உங்களுக்குத் தொல்லே தராது. இது எனக்கு ஆறுதலளிக்கிறது.

ஆனல், யார்... யார் உங்கள் பிறந்த நாளின்போது வெண்ரோசா மலர்களே அனுப் பப் போகிறீர்கள்? அந்த மலர்க்குவளே வெறு மனே கிடக்கும். ஆண்டுக்கு ஒரு தடவை, உங்கள் அறையிலே என் உயிரிலிருந்து வரும் அந்த நறு மணத்தை நீங்கள் சுவாசிக்க மாட்டீர்கள். முதலா வதாகவும் கடைசியாகவும் உங்களே ஒன்று வேண்டுகிறேன். எனக்காகச் செய்யுங்கள். ஒருவர் தன்னே நினைவு படுத்திக் கொள்ளும் அந்த சுப நாளான பிறந்த நாளன்று—உங்கள் பிறந்த நாளன்று சில ரோஜா மலர்கள் வாங்கி அந்த மலர்க்குவளேயில் வையுங்கள். ஆண்டுக்கு ஒரு தடவை இறந்தவர்கட்கு பிரார்த்தனே செய்கிறீர் களே அவர்களேப் போலவே இதை எனக்காகச் செய்யுங்கள். நான் உங்களேத் தவிர எவரையும் காதலிக்கவில்லே. உங்களுக்குள்ளே நான், ஆண் டுக்கு ஒரு நாள், உங்கள் அருகே-உங்கள் நினே வுடனேயே என்றும் வாழ்ந்தது போல அமைதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாக மெல்லிய நறுமணம் கலந்த காற்ருக வாழ விரும்புகிறேன். இதைச் செய்யுங்கள்; காதலரே தயவு கூர்ந்து இதை எனக்காகச் செய்யுங்கள்... என் முதல் வேண்டுதல்...கடைசி வேண்டுதலும் இதுவேதான்... நன்றி... நன்றி... நான் உங்களைக் காதலிக்கிறேன்...... காதலிக்கிறேன்...... சென்று வருகிறேன்......!

உணர்வற்ற அவரின் கரங்களிலிருந்து கடிதம் கீழே விழுந்தது. நீண்ட நேரமாக ஆழ்ந்து சிந்தித்துக் கொண்டிருந்தார். விரைவாக ஓடும் நீரோடையின் அடியிலுள்ள கல்போல, தெளிவற்ற நினைவிடையே அடுத்த வீட்டுச் சிறு பெண்...வளர்ந்த பெண்...நடன மண்டபத்தில் கண்ட பெண்...ஆகிய யாவும் உருவமற்று, மங்கிய குழப்பமான நிலையில் தெரிந்தன. பல உருவ நிழல்கள் நினைவிலே ஒன்ருெடொன்று மோதின. ஆயினும் முழு உருவமாக எதுவும் தெரியவில்லை. உணர்விலே சில நினைவுகள் கலங்கின. ஆயினும் எதையும் தெளிவாக நினைவுபடுத்த முடியவில்லை. அந்த உருவங்களைப் பலதடவைகள் கனவிலே கண்டதுபோல அவருக்குத் தோன்றியது.

எழுதும் மேசையிலுள்ள நீல மலர்க் குவளையை கண்கள் தேடின. அது வெறுமனே கிடந்தது. அவரது பிறந்த நாளன்று என்றுமே வெறுமனே இருந்ததில்லை. அவர் உடல் ஒரு கணம் குளிர்ந்தது. கண்ணில் தெரியாத ஒரு கதவு திடீரெனத் திறக்கப்பட்டு, வேருேர் உலகிலிருந்து அடக்கமான அந்த அறையுள் குளிர்ந்த காற்று வீசுவதுபோல உணர்ந்தார்; மரணத்தின் நினைவுடனும் மரண மற்ற காதலின் நினைவுடனும் சிறிது நேரம் ஒன்றியிருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரின் இதயத்தில் ஏதோ ஓர் உணர்வு எழுந்தது. இறந்த பெண்ணின் நினைவு, தூரத்திலிருந்து கேட்கும் கீதத்தின் ஒலிபோல, உருவமற்ற இன்ப உணர்வுடன் சிந்தனையைக் கலக்கியது.

---

UNIVERSITY OF CEYLON
-5 /
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF CEYLON
LIBRARY

Class No.................

Acc. No..................

This book is returnable on or before the last date stamped below.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF CEYLON
LIBR

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீபன் செவாக்

முதலாவது உலகப் போரின் பின் ஐரோப்பாவில் தலைசிறந்த ஓர் எழுத்தாளராக மதிக்கப்பட்டவர் ஸ்ரீபன் செவாக். (1881-1942)

உலகில் நாற்பதிற்கு மேலான மொழிகளில் இவர் நாவல்கள் யாவும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன, மலையாளம், வங்காளம், இந்தி ஆகிய மொழிகளிலும் சிலநாவல்கள் வெளிவந்துள்ளன. தமிழில் இதுவே முதன் முயற்சி.

உடலின்பத்தை மட்டுமே வாழ்வாகக் கொண்ட எழுத்தாளன் ஒருவனை பருவ மடையா நிலைதொட்டு சுயநலமற்று, அடிமைத்தனமாகக் காதலித்து, தன் வாழ்வையே தியாகம் செய்யும் ஓர் அபலைப் பெண்ணின் உணர்ச்சிமிக்க சோகக் கதை இக்குறுகிய நாவல்.

புதுமையும் வேகமும் உணர்ச்சியோட்டமும் கொண்ட கதையிது.

Jacket Printed at Commercial Printing & Publishing House, Madras-1.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org